www.padippakam.com

வானவில்

VAANAVIL
ISSUE – 36 DECEMBER 2013

இதழ் - 36 மார்கழி 2013

# தமிழ் மக்கள் மத்தியில் பலகட்சி ஜனநாயக முறை உருவாக்கப்பட வேண்டும்!

கடந்த செப்ரெம்பரில் நடைபெற்று முடிந்த வட மாகாணசபைத் தேர்தலின் பின்னர், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழுகின்ற தமிழ் முற்போக்கு – ஜனநாயக சக்திகளிடத்தில் ஒரு சிறிய அளவிலான விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது. அதற்குக் காரணம் இத்தேர்தலில் தமிழ் இனவாத, பிற்போக்கு சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏறத்தாழ 80 வீதமான வாக்குகளைப் பெற்றுக்கொண்டமையாகும்.

அதற்கு முன்னரான காலங்களில், சுதந்திர இலங்கைக்கான முதலாவது தேர்தல் நடைபெற்ற 1947 முதல் கடந்த பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற காலம் வரை, மாற்று தமிழ் சக்திகள் என அழைக்கப்படுகின்ற முற்போக்கு – ஜனநாயக சக்திகள் வடக்கின் மொத்த வாக்காளர்களில் மூன்றிலொரு பங்கு வாக்காளர்களின் ஆதரவை ஏதோ ஒரு வகையில் பெற்று வந்திருக்கிறார்கள். கடந்த வட மாகாணசபைத் தேர்தலில்தான் அது 20 வீதமாக வீழ்ச்சி அடைந்தது.

இந்த வீழ்ச்சி ஒருவகையில் 1977 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியிடம், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும் பெற்ற தோல்விக்குச் சமமானதாகும். அத்தேர்தலில் ஐ.தே.க ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று பெருவெற்றியீட்டியது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி வெறுமனே 8 ஆசனங்களில் வெற்றிபெற்று பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் பறிகொடுத்து நின்றது. இடதுசாரிக் கட்சிகளிலிருந்து சுதந்திரத்துக்குப் பின்னர் முதல் தடவையாக எவருமே நாடாளுமன்றம் செல்ல முடியாத நிலை உருவாகியது.

ஆனாலும் தமது தவறுகளைத் திருத்திக் கொண்ட சிறீ.ல.சு.கவும், இடதுசாரிக் கட்சிகளும், 1994இல் சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க தலைமையில் 17 வருட ஐ.தே.கவின் எதேச்சாதிகார ஆட்சியைத் தூக்கி எறிந்து, அதன் பின்னரான இன்றுவரையான 20 வருடங்களாக ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்றன. அந்த வெற்றிக்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டியவை. ஆனால் அந்த அளவுக்கு தமிழ் மக்கள் மத்தியில் இருகட்சி ஜனநாயக அரசியல் முறைமை ஆழமாக வேரூன்றியிருக்காவிட்டாலும், தமிழ் மாற்று அரசியல் சக்திகள் ஒரு குறிப்பிடத்தக்க அளவு தூரமாவது முன்னேறிச் செல்லக்கூடிய வாய்ப்பு அருகிப்போய் விடவில்லை.

மாற்று தமிழ் சக்திகள் முன்னால் இதுவரை காலமும்




செய்யப்படாத, ஆனால் அவசியம் செய்ய வேண்டிய பாரிய கடமை ஒன்று உள்ளது. அதாவது தமிழ் மக்கள் மத்தியில் குறைந்த பட்சம் எமக்கு ஜனநாயகத்தைப் போதித்த பிரித்தானியர் அளித்த வெஸ்ற்மினிஸ்ற்றர் இருகட்சி ஜனநாயக முறைமையைத் தன்னும் உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. அது இல்லாததால்தான், காலத்துக்காலம் 'தடி எடுத்தவன் எல்லாம் தண்டக்காரன்' என்பது போல, சில பிற்போக்கு தமிழ் கட்சிகள் ஏகப்பிரதிநிதித்துவ நிலையை எடுத்து வருகின்றன.

ஆரம்பத்தில் தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்று

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

படிப்பகம்

www.padippakam.com

# உறவு உறவானாலும், பறியிலை கை போடாதே!

இலங்கை – இந்திய (தமிழக) மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை இருநாட்டு அரசுகளும் எடுத்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. எந்தவொரு பிரச்சினைக்கும் சண்டையைவிட சமாதான வழியிலான தீர்வே சிறந்தது என்ற வகையில், பேச்சுவார்த்தை மூலம் இருநாட்டு மீனவர் பிரச்சினைக்கும் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவையே.

ஆனால் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் முன்னர், இருநாட்டு மீனவர்களுக்கும் இடையிலான பிரச்சினைகள் எவையென இனங்காணப்படுவது அவசியம். இல்லாவிடின் பேச்சுவார்த்தை குருடன் யானை பார்த்த கதையாக மாறிப்போக வாய்ப்புண்டு.

இலங்கைக் கடற்படையினர் அப்பாவிகளான தமிழக மீனவர்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடாத்துவதுடன், அவர்களைக் கைதும் செய்கிறார்கள் என்பதுதான், இந்தியத் தரப்பு மீனவர்கள் முன்வைக்கும் பிரச்சினை அல்லது குற்றச்சாட்டாகும். அதற்குத் தீர்வாக அவர்கள் கோருவதெல்லாம், இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி தாம் மீன்பிடிப்பதை இலங்கை அரசாங்கம் தடுக்கக்கூடாது என்பதே. இந்த நோக்கத்தை அடைவதற்காகவே தமிழகத் தரப்பு மீனவர்கள் இந்தப் பேச்சுவார்த்தையை எதிர்நோக்குகிறார்கள்.

மறுபக்கத்தில், இலங்கை மீனவர்களின் – அதாவது இலங்கையின் வட கிழக்கு தமிழ் மீனவர்களின் – எதிர்பார்ப்பு என்னவெனில், தமது கடல் எல்லைக்குள் தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைந்து, சர்வதேச ரீதியாகத் தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி தமது கடல்வளங்களை வாரிச் செல்வதைத் தடுக்க வேண்டும் என்பதே. அதையே இந்தப் பேச்சுவார்த்தையின் பெறுபேறாக இலங்கைத் தமிழ் மீனவர்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

இந்தப் பிரச்சினையின் அடிப்படை இதுதான் எனப் பார்க்கையில், ஒருதரப்பில் (தமிழக மீனவர் தரப்பில்) தவறும், மறுதரப்பில் (இலங்கை மீனவர்கள் தரப்பில்) கையறு நிலையும் இருப்பது தெள்ளெனத் தெரியும். எனவே இந்தப் பிரச்சினைக்கான தீர்வும் தெளிவானது.

அதாவது, தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை 'துன்புறுத்துவது' பற்றிப் பேசுவதற்கு முன்னர், அதற்கான காரணியான இலங்கைக் கடற்பரப்புக்குள் தமிழக மீனவர்களின் அத்துமீறலை எப்படித் தடுத்து நிறுத்துவது என்பதற்கு ஒரு முடிவு எட்டப்பட வேண்டும். அந்த முடிவு எட்டப்பட்டால், இலங்கைக் கடற்படையினரின் தொந்தரவு என்ற பிரச்சினை தமிழக மீனவர்களுக்கு ஏற்பட வாய்ப்பில்லை.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தமிழக அரசுக்கும், அங்குள்ள அரசியல் கட்சிகளுக்கும்தான் முக்கிய பங்குண்டு. ஏனெனில் அவர்களுக்குச் சார்பான மீன்பிடி வள்ளங்களின் பெரும் உரிமையாளர்கள்தான், தமிழக மீனவக் கூலித் தொழிலாளர்களை இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவும்படி அனுப்பி வைக்கிறார்கள். எனவே அவர்கள்தான் அந்த அப்பாவி மீனவர்ளைத் துன்பத்தில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

அத்துடன் இந்த தமிழக அரசியல்வாதிகள் இதயசுத்தி உள்ளவர்கள் என்றால், தமது இரத்த உறவுகள் என்று தாம் வர்ணித்து வரும் இலங்கைத் தமிழ் (மீனவ) மக்களுடைய வாழ்க்கையுடன்தான் தமது மீனவர்கள் விளையாடி வருகிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எப்படிப் பார்த்தாலும், இந்தப் பிரச்சினைக்கான தீர்வு, தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவாமல் பார்த்துக் கொள்வதே.

எனவே இலங்கை – இந்திய மீனவர்களின் பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தையின் போது, இலங்கை அரச அதிகாரிகளும், மீனவ சங்கப் பிரதிநிதிகளும், எமது மீனவர்களின் வாழ்வாதார உரிமையை விட்டுக் கொடுக்காது உறுதியுடன் செயல்படுவது அவசியமானது. *

---

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

---

*தரை மேல் பிறக்க வைத்தான் - எங்களைத்*
*தண்ணீரில் பிழைக்க வைத்தான்*
*கரை மேல் இருக்க வைத்தான் - பெண்களைக்*
*கண்ணீரில் துடிக்க வைத்தான்*
*தரை மேல் பிறக்க வைத்தான்....!*
*கட்டிய மனைவி, தொட்டில் பிள்ளை,*
*உறவைக் கொடுத்தவர் அங்கே!*
*அலை கடல் மேலே அலையாய் அலைந்து*
*உயிரைக் கொடுப்பவர் இங்கே!*
*வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்*
*கடல்தான் எங்கள் வீடு*
*வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்*
*கடல்தான் எங்கள் வீடு*
*முடிந்தால் முடியும், தொடர்ந்தால் தொடரும்,*
*இதுதான் எங்கள் வாழ்க்கை!*
*இதுதான் எங்கள் வாழ்க்கை!* **–வாலி**


படிப்பகம்

www.padippakam.com

# இனியும் ஏகாதிபத்தியம் செல்லுபடியாகாது!

## – ஈக்குவடோர் துணை அதிபர் ஜோர்ஜ் க்ளாஸ் எஸ்பினெல் பேட்டி

ஜோன் செரியன் (JOHN CHERIAN)



Jorge Glas Espinel

ஈக்குவடோர் (Ecuador) தொடர்ந்து சர்வதேசத்தின் கவனத்தில் இருக்கிறது.

'விக்கிலீக்ஸ்' ஜுலியன் அசாஞ் சேவுக்கு (Julian Assange) இலண்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் தஞ்சமளித்தபோது, ஈக்குவடோரின் துணிச்சல் அனைவராலும் பாராட்டப் பட்டது. அமேசன் (Amazon) காடுகளை மிக மோசமான அளவு மாசுபடுத்திய காரணத்துக்காக அமெரிக்க எண்ணெய்க் குழுமத்தின் மீது ஈக்குவடோர் நீதிமன்றம் விதித்திருந்த பல நூறு கோடி டாலர் அபராதத்தை நீக்க அந்த நிறுவனம் என்னென்னவோ செய்தும் அமெரிக்க நிர்பந்தங்களுக்கு ஈக்குவடோர் இன்னும் இடம் கொடுக்கவில்லை. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முன்னுரிமை தரும் நாடாக ஈக்குவடோர் இருக்கிறது. ஈக்குவடோரில் தொலைத்தொடர்பு, எரிசக்தி போன்ற முக்கியமான துறைகளைத் தனியார்மயத்திலிருந்து விடுவித்ததில், துணை அதிபரான ஜோர்ஜ் க்ளாஸ் எஸ்பினெலுக்கு (Jorge Glas Espinel) முக்கியமான பங்கு உண்டு. சமீபத்தில் இந்தியா வந்திருந்தார் அவர். ஈக்குவடோரில் அகழ்வு மற்றும் உற்பத்திப் பணிகளை இந்தியாவின் எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கழகத்தின் வெளிநாட்டுக் கிளையான ஓ.என்.ஜி.சி விதேஷ் (ONGC Videsh, the overseas arm of state-owned Oil and Natural Gas Corporation) மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் இந்தப் பயணத்தின்போது கையெழுத்தானது. ஜோர்ஜ் க்ளாஸ் எஸ்பினெலுடனான உரையாடலிலிருந்து...

***வளர்ச்சிக்காக ஈக்குவடோர் பின்பற்றும் வழிமுறை மிகவும் பாராட்டப்பட்டிருக்கிறதே...***

வேறெந்த லத்தீன் அமெரிக்க நாடுகளைவிடவும் அடிப்படைக் கட்டமைப்புகளின் வளர்ச்சியில் நாங்கள் மூன்று மடங்கு முதலீடு செய்திருக்கிறோம். வேலைவாய்ப்பின்மை பிரச்சினை என்பது லத்தீன் அமெரிக்காவிலேயே இங்கேதான் மிகவும் குறைவு என்பதுடன் வறுமையைப் பெருமளவு ஒழித்திருப்பதும் நாங்கள்தான். ர∴பேல் கொரியா (Rafael Correa) 2007-ல் அதிபராகப் பதவியேற்றதிலிருந்து வறுமை ஒழிப்புக்குதான் அரசு முன்னுரிமை அளித்துவருகிறது. 2016-க்குள் வறுமையை ஒழித்துவிடும் முயற்சியில் இருக்கிறோம். இதை சாதிப்பதற்காக, உத்வேகமிக்க ஒரு வளர்ச்சித் திட்டத்தைத் தயார்ப்படுத்தியிருக்கிறோம். எட்டு நீர்மின் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டங்களெல்லாம் மின்சாரத்தைப் பொறுத்தவரை தற்சார்பு உடையதாக ஈக்குவடோரை ஆக்கும்.

ஈக்குவடோரில் உற்பத்தி செய்யப்படும் எரிசக்தியில் 93% புதுப்பிக்கக் கூடிய சக்தியாக இருக்கும். இதுதான் சுற்றுச்சூழலுக்கு உகந்தது. படிம எரிபொருளைப் பயன்படுத்தாத வழிமுறையை நோக்கி எங்கள் ஆற்றல் உற்பத்தித் துறையின் அடிப்படையை நாங்கள் நகர்த்த விரும்புகிறோம்.

இந்தியா மிக முக்கியமான வகையில் எங்களுக்கு உதவிசெய்ய முடியும். எங்களிடம் ஏராளமான கனிம வளங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் 2,00,000 பீப்பாய் எண்ணெயை நாங்கள் உற்பத்திசெய்கிறோம். பெட்ரோலியம், உலோகங்கள் போன்ற துறைகளில் இரண்டு நாடுகளுக்கும் இடையே பெரிய அளவில் ஒத்துழைப்பு ஏற்பட முடியும். நாங்கள் எண்ணெயை ஏற்றுமதி செய்யும் அதே நேரத்தில், பெட்ரோலை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

***யாசுனி மழைக் காட்டில் (Yasuni rainforest) எண்ணெய் மற்றும் கனிமவள அகழ்வுகளை மேற்கொள்ளும் திட்டத்தில் இருக்கிறீர்கள் அல்லவா நீங்கள்...***

யாசுனி காப்புக்காடுகளில் (யாசுனி ரிசர்வ், Yasuni reserve) இன்னும் பல பகுதிகள் வணிகப் பயன்பாடுகளுக்கு உட்படுத்தப்படாமல் பாதுகாக்கப்படுகின்றன. ஈக்குவடோர் அரசால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கை மிகவும் சரியான நடவடிக்கை. குறிப்பிட்ட அளவே எண்ணெயை நாங்கள் எடுக்கத் திட்டமிட்டிருக்கிறோம். காட்டைக் காக்கும் முயற்சிகள் மட்டுமல்லாமல் அங்கே இருக்கும் அளப்பரிய எண்ணெய் வளத்தின் மூலம் பலன் பெறுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேசிய சட்டசபையின் ஒப்புதலில் நிறைய


படிப்பகம்

www.padippakam.com

நிபந்தனைகள் இருக்கின்றன. அங்கே வாழும் மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாமல் இருப்பதை நாங்கள் உறுதிப்படுத்த வேண்டும். எங்கள் தேசியப் பூங்காக்களின் பாதுகாப்புக்குத்தான் நாங்கள் முன்னுரிமை கொடுக்கிறோம்.

***ஈக்குவடோருக்கு 'சேவ்ரன்' (Chevron) நிறுவனத்துடன் உள்ள பிணக்கில் ஏதாவது முன்னேற்றம் காணப்படுகிறதா?***

அமேசன் (Amazon) பகுதியில் அவர்கள் எப்படிப்பட்ட சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இழப்பீடு வழங்குவார்கள் என்றால், பிரச்சினையை எளிதாகத் தீர்த்துவிட முடியும். பாதிக்கப்பட்ட மக்கள் இந்த சேதங்களுக்கான இழப்பீடுகளை வேண்டிக் கடந்த 10 ஆண்டுகளாகப் பன்னாட்டு நீதிமன்றங்களில் போராடிக்கொண்டிருக்கிறார்கள். நியூயார்க்கில் உள்ள ஒரு நீதிமன்றம் 'சேவ்ரன்' நிறுவனத்துக்கு எதிராகத் தீர்ப்பளித்தாலும், அந்த நிறுவனம் ஈக்குவடோரில் உள்ள நீதிமன்றம் ஒன்றில்தான் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று கோரிக்கை எழுப்பியது. இப்போது, ஈக்குவடோரில் உள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்தாலும்கூட அது செல்லாது என்கிறது.

1992-ம் ஆண்டிலோ 1993-ம் ஆண்டிலோ நாட்டை விட்டு 'சேவ்ரன்' வெளியேறியது.

1997-ல் ஈக்குவடோருக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. நாட்டைவிட்டு வெளியேறிய பிறகும் மோசமான விதத்தில் 'சேவ்ரன்' நடந்துகொண்டது. ஹேக் (The Hague) நகரில் இருந்த நீதிமன்றத்தை அணுகி, 1997-ம் ஆண்டு ஒப்பந்தத்தை அடிப்படையாகக்கொண்டு 'சேவ்ரன்' தனக்குச் சாதகமான தீர்ப்பைப் பெற்றுக்கொண்டது. சேதங்களுக்கு இழப்பீடு வழங்கும் பொறுப்பானது மூன்றாம் தரப்பு ஒன்றின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. எங்கள் நாட்டின் சுற்றுச்சூழல் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் இதுதான். எங்கள் நாட்டுக்குள் ஊடுருவுவதற்கு அவர்கள் (அதாவது மேலை நாட்டினர்) ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை, எங்கள் இறையாண்மையின்மீது தாக்குதல் நடத்துவதற்கென்று அவர்களிடம் நீதிமன்றங்கள் இருக்கின்றன.

***ஜூலியன் அசாஞ்சேயின் விவகாரம் முடிவுக்கு வரும் நிலையில் இருக்கிறதா?***

தீர்வு எங்கள் கையில் இல்லை. ஜூலியன் அசாஞ்சே விவகாரத்தில் மனித உரிமைகள் மீறப்படுவதாக நாங்கள் கருதியதால், அவருக்குத் தஞ்சமளித்தோம். தஞ்சமளிக்கப்படுவதற்குத் தேவையான நிபந்தனைகளை அவர் பூர்த்திசெய்தார். இந்தப் பிரச்சினை எங்கள் அதிகாரத்துக்கு உட்படாதது. தீர்வு, வெளியுறவுத் துறையின் கையிலும் இங்கிலாந்து நடந்துகொள்ளும் விதத்திலும்தான் இருக்கிறது. எங்களை யாரும் கேள்வி கேட்க முடியாது. இறையாண்மை கொண்டது எங்கள் நாடு. தஞ்சமளிப்பதற்குத் தேவையான நிபந்தனைகளை நிறைவேற்றுபவர்களுக்குத் தஞ்சமளிக்கும் உரிமை எங்களுக்கு இருக்கிறது.

***தஞ்சம் கேட்டு எட்வர்டு ஸ்னோடென் (Edward Snowden) கோரிக்கை விடுத்தபோது, அதை மறுக்க வேண்டுமென்று உங்களுக்கு நெருக்குதல் தரப்பட்டது இல்லையா?***

ஈக்குவடோர் என்பது இறையாண்மை பொருந்திய ஒரு நாடு. அதற்கு வேறு எந்த நாடும் நெருக்குதலோ அச்சுறுத்தலோ கொடுக்க முடியாது. ஏகாதிபத்தியங்கள் விதிக்கும் நிபந்தனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் சில முறை எங்களை வெற்றிகொண்டிருக்கலாம். ஆனால், அதெல்லாம் அந்தக் காலத்தில். இப்போது நாங்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஜனநாயக நாடாக உருவெடுத்திருக்கிறோம் வளர்ச்சியைப் பொறுத்தவரை பன்னாட்டு நிதியத்தின் (International Monetary Fund) அல்லது பிற நாடுகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமல் எங்களுக்கேயான பிரத்தியேகமான ஒரு வழிமுறையை நாங்கள் உருவாக்க முயன்றுகொண்டிருக்கிறோம்.

***ஈக்குவடோரில் இருக்கும் ஊடகங்களெல்லாம் அரசாங்கத்தால் ஒடுக்கப்படுவதாக மேல்நாட்டு ஊடகங்களில் செய்திகள் உலவுகின்றன...***

பத்திரிகை சுதந்திரத்தின் மீதும் மனித உரிமைகள் மீதும் வைத்திருக்கும் மரியாதையை பொய், புரட்டுகள், வதந்திகள் ஆகியவற்றோடு சேர்த்து நாம் குழப்பிக்கொள்ளக் கூடாது. எங்கள் செயல்திட்டங்களை அணுகுவதில் ஊடகங்களின் சில பகுதிகள் நேர்மையற்ற அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றன என்பதுதான் பிரச்சினை.

***21-ம் நூற்றாண்டில் சோஷலிசத்துக்கு எதிர்காலம் இருக்கிறதா?***

சந்தேகமே வேண்டாம், 21-ம் நூற்றாண்டின் சோஷலிசம் தயாரிப்பு நிலையில் இருக்கிறது. ஒற்றை வழிமுறை என்று ஏதும் கிடையாது. எங்கள் நாட்டு மக்கள் அவர்களுடைய தேவைகளெல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கும் சூழலில் வாழ்வதையே நாங்கள் விரும்புகிறோம். இந்த நோக்கம் ஜனநாயகத்தின் அடிப்படையிலே செயல்படுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

இதுதான் மிக முக்கியமான அளவுகோல். மறுவிநியோகக் கொள்கைகளை நாங்கள் அனுசரித்துவரும் அதே நேரத்தில், தனியார் சொத்துரிமைக்கும் தனியார் தொழில் முயற்சிகளுக்கும் நாங்கள் உரிய மரியாதை கொடுத்துவருகிறோம். மருத்துவப் பராமரிப்பையும் கல்வியையும் பெறும் வழிமுறைகளை எளிதாக்குவதுதான் எங்கள் இலக்கு.

சந்தை என்பது சமூகத்தின் நலனுக்காகத்தான் இருக்க வேண்டுமே ஒழிய, சந்தையின் நலனுக்காக சமூகம் என்ற நிலை இருக்கக் கூடாது. மூலதனம் என்பது மனிதர்களைவிட உயர்ந்ததல்ல என்பதுதான் முக்கியமான விஷயம். புரட்சி, வளர்ச்சி ஆகிய நிரந்தரக் கோட்பாடுகளுடன் நாம் 21-ம் நூற்றாண்டில் நுழைந்திருக்கிறோம்.

***நன்றி:*** Frontline
***தமிழில்: ஆசை***


படிப்பகம்

www.padippakam.com

# புலிகள் பற்றிய நிலைப்பாட்டில் மேற்கு நாடுகளின் அணுகுமுறையைப் பின்பற்றும் ஜெயலலிதா!



அமெரிக்கா, பிரித்தானியா, கனடா உட்பட பல மேற்கத்தைய நாடுகள், இலங்கையில் புலிகளுடனான போர் முடிவடைந்த 2009 மே மாத காலப்பகுதியின் பின்னர், இலங்கை அரசாங்கம் மீது போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், ஊடக அடக்குமுறை, நீதிச்சேவையை தரம் தாழ்த்தியது என அடுக்கடுக்கான பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்ற போதிலும், மறுபக்கத்தில் அந்த நாடுகள் எல்லாமே புலிகள் இயக்கத்தைத் தொடர்ந்தும் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்தே வைத்திருக்கின்றன. அது மாத்திரமின்றி, குறித்த தவணை முறையில் அந்தத் தடையை நீடித்தும் வருகின்றன. அண்மையில் கூட, அவுஸ்திரேலிய அரசாங்கம் புலிகள் மீதான தனது தடையை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடித்துள்ளது.

மறுபக்கத்தில் இந்த நாடுகள் இலங்கை மீது தொடர்ச்சியாகச் சுமத்தும் குற்றச்சாட்டுகளுக்குக் காரணமாக, இலங்கையில் ஜனநாயகத்தை மீளவும் நிலை நிறுத்துவதற்காகவே அவற்றைச் செய்வதாக ஒரு தோற்றப்பாட்டைக் காட்ட முயல்கின்றன. அவர்கள் கூறும் காரணம் ஒரு குறிப்பிட்ட அளவு உண்மை என்ற போதிலும், அதுதான் முழுமையான உண்மை அல்ல.

மேற்கு நாடுகள் இலங்கை பற்றிய தமது கொள்கைகளை வகுப்பதில் வேறு சில காரணிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பூகோளரீதியாக இலங்கையின் கேந்திர முக்கியத்துவம், அதன் செழிப்பான இயற்கை வளங்கள், இலங்கை மேற்குக்கு சவாலாக வளர்ந்து வரும் சீனாவுடன் கொண்டுள்ள நெருங்கிய உறவுகள் என்பனவும் பிற காரணிகளாகும். அத்துடன், இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியமான பழமைவாத அரசியல் போக்கும், புலம்பெயர் தமிழர்கள் இந்நாடுகளில் செலுத்தும் செல்வாக்கும் கூட மேலதிக காரணிகளாகும்.

குறிப்பாக, இந்த மேற்கு நாடுகளில் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பல்லாயிரக்கணக்கில் (கனடாவில் 3 இலட்சம் வரை) குடியேறியுள்ள இலங்கைத் தமிழர்களின் வாக்குகள் இந்த நாடுகளில் உள்ள அரசியல் கட்சிகளின் இலங்கை சம்பந்தமான கொள்கைகளில் தாக்கம் ஏற்படுத்த ஆரம்பித்துள்ளன. அதிலும் குறிப்பாக, கனடாவிலும், பிரித்தானியாவிலும் அதிக தமிழர்கள் வாழ்வதாலும், அவர்கள் அங்குள்ள எல்லா அரசியல் கட்சிகளிலும் அங்கம் வகிப்பதாலும், இந்த நிலைமை கூடுதலான தாக்கத்தை உண்டுபண்ணுகின்றது. இந்த உண்மையை இலங்கைக்கான முன்னாள் கனடியத் தூதுவர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் பகிரங்கமாகவே ஊடகங்களில் குறிப்பிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதிலும், இன்று இலங்கையைக் கடுமையாகச் சாடி வரும், அதன் காரணமாக அண்மையில் கொழும்பில் நடந்து முடிந்த பொதுநலவாய (கொமன்வெல்த்) மாநாட்டையே பகிஸ்கரித்த கனடியப் பிரதமர் ஸ்ரீபன் காபரின் அரசாங்கம்தான், புலிகளை கனடாவில் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்தது. அதுமாத்திரமின்றி, புலிகளின் முன்னணி அமைப்பாக இருந்துகொண்டு செயல்பட்டு வந்த உலகத் தமிழர் இயக்கத்தையும் தடை செய்து, அதன் காரியாலயங்களையும் இழுத்து மூடியது.

சோமு

இது எதைக் காட்டுகிறது என்றால், ஒரு பக்கத்தில் தமது பூகோள அரசியல் நலன்கள் காரணமாக இந்த மேற்கு நாடுகள் இலங்கைக்கு பலவிதமான நெருக்கடிகளைக் கொடுத்தாலும், மறுபக்கத்தில் தமது நாடுகளில் புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகள் தலைதூக்காமலும் பார்த்துக் கொள்கின்றன என்பதைத்தான். இதைப் புரிந்துகொள்ளாத புலம்பெயர் புலிகள், இந்த நாடுகளின் இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளை, புலிகளுக்கான அங்கீகாரம் என நினைத்துக்கொண்டு, 'அவலை நினைத்து உரலை இடித்து'க் கொண்டிருக்கிறார்கள்.

மேற்கு நாடுகளின் இந்த 'அர்த்தநாரீஸ்வர' (சிவன் பாதி – உமை பாதி) நிலைப்பாட்டைத்தான், மேற்குலக விசுவாசியான தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும் பின்பற்றுவதாகத் தெரிகிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கருணாநிதி கொண்டிருந்த ஏகபோகத்தைத் தகர்ப்பதற்காக, இலங்கை அரசுக்கு எதிராக சட்டசபையில் தீர்மானங்கள் நிறைவேற்றும் ஜெயலலிதா, அதேநேரத்தில் புலிகளுக்கு ஆதரவாக தமிழகத்திலுள்ள தீவிர புலி ஆதரவுக் குழுக்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலிருந்து தனது அ.இ.அ.தி.மு.க கட்சியை எப்பொழுதும் எட்டமாகவே வைத்திருக்கிறார்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தீர்மானங்கள் போடும் ஜெயலலிதா, தனது மாநிலத்தில் தமிழின இன உணர்வு 'பொங்கிப்

www.padippakam.com

பிரவாகித்து' குழப்ப நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்வதில் மிகக் கவனமாக இருக்கிறார். புலிகளுக்கு ஆதரவான நமவடிக்கைகளை முளையிலேயே கிள்ளி எறிவதுடன், புலிச் சந்தேக நபர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களை தயவு தாட்சண்யமின்றி உடனடியாகவே கைது செய்து சிறையில் போடுகின்றார். அவர் ஒருபோதும் இறுதிப் போரின் போது மரணித்த புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கோ, அவரது 'மாவீரர்'களுக்கோ அஞ்சலியோ மரியாதையோ செலுத்தியது கிடையாது. இலங்கைத் தமிழர்களையும், புலிகளையும் அவர் வெவ்வேறாகவே பார்த்து வந்திருக்கிறார்.

அண்மையில் கூட பழ.நெடுமாறன் போன்ற தீவிர புலி ஆதரவுக் கோஸ்டிகளால் தஞ்சாவூரில் நிறுவிய 'முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்' என்ற காட்சிக்கூடத்தை எவ்வித தயக்கமுமின்றி காவல்துறையின் உதவியுடன் இடித்துத்தள்ளினார். புலிச் சந்தேக நபர்களை அடைத்து வைத்திருக்கும் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் நவம்பர் 27ஆம் திகதி புலிகளின் 'மாவீரர் தின'த்தைக் கொண்டாடிய புலி ஆதரவாளர்களைக் கைதுசெய்யவும் அவர் தயங்கவில்லை.

ஜெயலலிதாவின் நிலைப்பாட்டைப் புரிந்துகொள்ளாத புலம்பெயர் புலி அடிவருடிகள், 'கருணாநிதி துரோகி' என வர்ணித்துவிட்டு, ஜெயலலிதாவைத் தமது புதிய இரட்சகராகக் கடந்த சில மாதங்கள் கொண்டாடி வந்தனர். ஆனால் இப்பொழுது தஞ்சாவூரில் 'முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற'த்தை ஜெயலலிதா இடித்துத் தள்ளியதோடு, இப்பொழுது அவரையும் 'தமிழினத் துரோகி' எனத் தூற்றத் தொடங்கியுள்ளனர். கனடாவிலிருந்து வெளிவரும் புலிகளுக்குச் சார்பான பத்திரிகையொன்று, '1983இல் இலங்கையில் சிங்களப் பேரினவாதம் கறுப்பு யூலையை உருவாக்கியது போன்று, 2013இல் ஜெயலலிதா கறுப்பு நொவம்பரை உருவாக்கிவிட்டார்' என முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை ஜெயலலிதா இடிக்க உத்தரவு பிறப்பித்த பின்னர் அவர் பற்றி வசைபாடியுள்ளது.

இப்படி காலத்துக்காலம் ஆளை மாற்றி ஆளை 'துரோகி' எனப் புலிகள் வசைபாடுவதை நிறுத்தும் வரை, அவர்களது 'குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டும்'அரசியல் ஒருபோதும் மாறப்போவதில்லை. *

## 'வானவில்' நோக்கி வந்த கடிதம்

உங்கள் வானவில்லை பங்கிட்டுக் கொள்ளக் கிடைத்தமைக்கு நன்றி. இது மிகவும் தகவல்கள் அடங்கியதும், தற்போதைய நிலைமைகள் குறித்து சமநிலையான பார்வை கொண்டதுமாகும். ஆம், தமிழ் தேசியக் கூட்டமைப்பு முழுமையான யுத்த தந்திரம் (Strategy) இல்லாமல் செல்கின்றது என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். விவசாயிகள், தொழிலாளர்கள், குறைந்த வருமானம் உள்ள குடும்பங்கள் என்பனவற்றின் எதிர்காலத்துக்காக முற்போக்கு அரசியல் சக்திகள் ஒரு பாத்திரம் வகிப்பதை உறுதிப்படுத்துவதை நான் காண விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினைகளை அரசியல்ரீதியாக எடுத்து, நல்ல முறையில் ஆய்வு செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

நாம் கடுமையாகப் பிரயத்தனப்பட்டு, மேலும் அதிக சக்தியைச் செலவிட்டு, நல்ல கட்டுரைகளைக் கொண்டுவர வேண்டிய தேவை உள்ளது. - ஜெய முருகன்

**யாழ்ப்பாணத் தபால்:**

# வி(னை)தை விதைத்தவர்களும் மரம் நட்டவர்களும்!

புலிகள் போரில் மரணிக்கும் தமது உறுப்பினர்களின் சடலங்களை "வித்துடல்கள்" என்று வர்ணிப்பது வழமை. அத்துடன் அவர்களது உடல்களை தமிழர் பொது மரபுப்படி எரிக்காது புதைப்பதும் வழமை. அதற்கு அவர்கள் கூறும் விளக்கம் என்னவெனில், தமது உறுப்பினர்கள் மரணிக்கவில்லை எனவும், விதையாகிப் போயிருக்கிறார்கள் எனவும், அதனால்தான் தாம் அவர்களை மண்ணில் புதைக்கிறோம் என்றும், அவர்கள் ஒருநாள் மீண்டும் முளைத்து வருவார்கள் எனவும் சொல்வார்கள். (அதற்குப் பயந்துதான் இராணுவம் மாவீரர் மயானங்களை புல்டோசர் போட்டு இடித்துக் கிளறி சின்னாபின்னமாக்கி இருக்கிறதோ என்னவோ?)

அதனால்தானோ என்னவோ, புலிகள் அழிந்து அவர்களது தலைவர் பிரபாகரனும் விதையாகிப் போகாமல் என்னவோ ஆகிப்போன பின்பு, சென்ற வருட 'மாவீரர் தினம்' (உண்மையில் பிரபாகரனின் பிறந்த தினம்) அன்று, வட மாகாணத் தமிழர்களை ஆழப்பிறந்த ("ஆண்ட தமிழினம் மீண்டும் ஒருமுறை ஆண்டால் என்ன" என்பதற்கேற்ப) வட மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும், அவரது சகாக்களும் புதிதாக முளைத்த மரக்கன்றுகள் சிலவற்றை மாவீரர் நினைவாக நாட்டி வைத்திருக்கிறார்கள்.

பொதுவாக ஒருவர் ஒரு மரக்கன்றை நாட்டினால், அது வரவேற்கப்பட வேண்டிய நல்ல விடயம். ஆனால் தமது வாழ்நாளில் தமிழ் மண்ணில் ஒரு புல் பூண்டைக்கூட நட்டறியாத தமிழ் தலைமைகள், 'அவலை இடிப்பதாக நினைத்து, உரலை இடித்த' கதையாக, மாவீரர் தினத்தை நினைவுகூர்வதாக நினைத்து மரக்கன்றுகளை நாட்டி மனச்சந்தோசம் அடைந்திருக்கின்றனர்.

ஏனெனில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமான புலிகள் இயக்கத்தின் செத்த உறுப்பினர்களை நினைவுகூர்ந்து எந்தவித நிகழ்ச்சிகளையும் செய்யக்கூடாது எனக் கடும் தொனியில் அரசாங்கம் உத்தரவு போட்டிருந்தபடியால், இந்த 'சுத்த வீரர்கள்', சூரனை அழிக்க முருகன் மாமரத்துக்குள் பதுங்கி வந்தது போல, மரக்கன்றுகளுக்குள் பதுங்கி நின்று மாவீரர் தினம் கொண்டாடி புளகாங்கிதம் அடைந்திருக்கின்றனர்.

அதையும்கூட, மூஞ்சிறைப் பிடித்து அதற்கு ஜிகினா வேலைப்பாடுகள் செய்து அழகு பார்க்கிறது போலச் செய்திகள் பிரசுரிக்கின்ற யாழ்ப்பாண 'உதயன்' பத்திரிகை, "தடையை மீறி மாவீரர் தினத்தில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன" என கிளைமாக்ஸ் செய்தது. அதாவது மரக்கன்றுகள் நாட்டுவதற்கு ஏதோ இலங்கையில் தடை இருப்பது போல.

உண்மையைச் சற்று நோக்கினால், தமிழ் பகுதிகளில் மாவீரர் தினத்தில் மட்டுமின்றி, வருடம் பூராவும் மரக்கன்றுகள் நாட்ட வேண்டிய பாரிய கடப்பாடு தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு உண்டு என்பது விளங்கும். ஏனெனில் அழித்தவன் தானே அதை மீண்டும் உருவாக்கிப் பிராயச்சித்தம் செய்ய வேண்டும்?

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செல்வப் புதல்வர்களான புலிகள் வடக்கு கிழக்கில் தர்ப்பார் நடாத்திய போது செய்த சுற்றுச்சூழல் அழிப்பு நடவடிக்கைகள் கொஞ்சநஞ்சமா?

தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...


படிப்பகம்

www.padippakam.com

# கவிஞர் பப்லோ நெருடாவின் மரணத்துக்கான சந்தேகம் நீடிக்கின்றது!

உலகப் புகழ்பெற்ற சிலி நாட்டுக் கவிஞரும், இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான பப்லோ நெருடா (Pablo Neruda), அந்நாட்டில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முற்போக்கு ஜனாதிபதி சல்வடோர் அலன்டேக்கு (Salvador Allende) எதிராக அந்நாட்டு இராணுவ ஜெனரல் அகஸ்ரோ பினோசெற் (Augusto Pinochet) இராணுவச் சதி மேற்கொண்டு அலன்டேயைக் கொலை செய்து ஆட்சியைக் கைப்பற்றி இரண்டு வாரங்களில் 1973 செப்ரெம்பரில் தமது 69ஆவது வயதில் காலமானார். அவரது எதிர்பாராத திடீர் மரணம் அந்த நேரத்தில் உலக மக்களிடையே பேரதிர்ச்சியை உண்டாக்கியது. இராணுவ சர்வாதிகரி பினோசெற் தான் நெருடாவைக் கொலை செய்வித்தான் என்ற சந்தேகங்கள் எழுந்தன.



கவிஞர் பப்லோ நெருடா

பினோசெற் மேற்கொண்ட இந்தச் சதியின் பின்னணியில் அமெரிக்க சி.ஐ.ஏ உளவு நிறுவனம் இருந்ததாகக் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டன. பினோசெற் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர், அவனுடைய எதேச்சாதிகார ஆட்சிக்கு அமெரிக்கா சகல வழிகளிலும் உதவியது. சுமார் 16 ஆண்டுகள் (1974 - 90) நீடித்த ஆட்சியின் போது பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும், இடதுசாரிகளும், ஜனநாயகவாதிகளும் படுகொலை செய்யப்பட்டனர். தொழிற்சங்க இயக்கம், மாணவர் அமைப்புகள், பெண்கள் அமைப்புகள், மனித உரிமை ஸ்தாபனங்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் என அனைத்து மக்கள் பிரிவினர்களும் மிகவும் மோசமாக அடக்கியொடுக்கப்பட்டனர்.

ஈராக்கிலும், லிபியாவிலும், ஆப்கானிஸ்தானிலும் 'சர்வாதிகார' ஆட்சிகளைக் கவிழ்ப்பதற்கு முன்நின்ற, சிரியாவிலும், ஈரானிலும் அதேபோன்ற நிலையை உருவாக்க முன்னிற்கின்ற 'ஜனநாயகப் பாதுகாவலான' அமெரிக்கா, சிலியில் பினோசெற் நடாத்திய காட்டுமிராண்டித்தனமான ஆட்சிக்கு எதிராகச் சுண்டு விரலைக்கூட அசைக்கவில்லை.

இந்த நிலையில் கவிஞர் பப்லோ நெருடாவின் மரணம் பற்றிய மர்மமும் நீடித்து வந்தது. பப்லோ நெருடா ஒரு முற்போக்குக் கவிஞராக இருந்தது மட்டுமின்றி, அவர் மக்கள் ஜனாதிபதி அலன்டேயின் நெருங்கிய நண்பராகவும் இருந்து, அவரது அரசு எடுத்து வந்த ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை உறுதியாக ஆதரித்த ஒருவராகவும் இருந்தார். அதனால்தான் அலன்டேயைக் கொலை செய்து அவரது ஆட்சியை பலவந்தமாகக் கைப்பற்றிய இராணுவ பாசிசவாதிகள், அலன்டேயையும் திட்டமிட்டுக் கொலை செய்திருப்பார்களோ என்ற சந்தேகம் நிலவியது.

**பிரதாப்**

அதுமட்டுமல்ல, நெருடா சிலி கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவரும் ஆவர். ஒரு தடவை செனட்டராகவும் பணி புரிந்ததுடன், ஜனாதிபதி அலன்டேயினால் பிரான்சுக்கான தூதுவராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் அவருக்கு ஒருவகைப் புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, பாரீசில் சிகிச்சையும் பெற்றார். அதன்பின் 1972 பிற்பகுதியில் நாடு திரும்பினார்.

1973 செப்ரெம்பர் 11இல் பினொசெற் இராணுவச் சதியை மேற்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றியதுடன், ஜனாதிபதி அலன்டேயையும் கொலை செய்தான். அந்த நேரத்தில் அலன்டேயின் நெருங்கிய நண்பரான கவிஞர் பப்லோ நெருடாவுக்கு தலைநகர் சந்தியாகோவில் இருந்த வீட்டையும், அவர் மனைவியுடன் வசித்து வந்த கலையோர நகரான ஸ்லா நெக்ராவில் (Isla Negra) இருந்த வீட்டையும் இராணுவத்தினர் சூறையாடியிருந்தனர்.

அவருக்கு ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து அவரைப் பாதுகாப்பதற்காக நெருடாவையையும் அவரது


படிப்பகம்

www.padippakam.com

மனைவியையும் மெக்சிக்கோவுக்கு வந்துவிடும்படி அந்நாட்டு அரசாங்கம் அழைப்பு விடுத்தது. ஆனால் அவர் சுகவீனமுற்றிருந்ததால், சந்தியாகோவிலிருந்த ‘சந்தா மரியா’ (Santa Maria) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். முக்கியமாக மெக்சிக்கோவுக்குச் செல்வதற்கு முன்னர் பாதுகாப்பாகத் தங்குவதற்காகவே அவர் அந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் சென்றதாகக் குறிப்பிடும் அவரது முன்னாள் கார்ச்சாரதி மனுவல் அரயா (Manuel Araya) , அங்கு அவருக்கு சந்தேகத்துக்கிடமான ஊசி மருந்தொன்று உடலில் செலுத்தப்பட்டதாகக் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து நெருடா விசமூட்டிக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்கள் எழுந்தன. பினொசெற்றின் சுமார் 16 வருடகால சர்வாதிகார ஆட்சி ஒழிந்த பின்னர், நீதிமன்றத்தில் இதுபற்றி முறைப்பாடும் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து 2013இல் நீதிபதி ஒருவர் நெருடாவின் உடலை புதைகுழியிலிருந்து எடுத்து இரசாயனப் பகுப்பாய்வு செய்யும்படி உத்தரவிட்டார்.

நெருடாவின் உடலைப் பகுப்பாய்வு செய்த சிலி மற்றும் வெளிநாட்டு பகுப்பாய்வாளர்கள் அவர் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டதற்கான தடயங்கள் எதுவும் காணப்படவில்லை என்றும், புறொஸ்ரேற் (Prostate) புற்றுநோய்க்கு மருந்து வழங்கப்பட்டதற்கான தடயங்கள் மட்டுமே இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்களது முடிவு பற்றிக் கருத்து வெளியிட்ட நெருடாவின் மருமகனும், சட்டத்தரணியுமான றொடெல்ஃபோ றோயெஸ் (Rodolfo Royes), இது ஒரு ஆரம்பகட்ட ஆய்வே என்றும், சறின்காஸ் (Saringas) மற்றும் தல்லியும் (Thalluim) என்பனவற்றின் தாக்கம் இருந்ததா என்பதை அறிய மேலும் பரிசோதனைகள் செய்யும்படி நீதிமன்றத்திடம் கோரப்போவதாக கூறியுள்ளார். அதற்கு நீதிபதி சாதகமாகப் பதிலளித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தசாப்தங்களாக தென் அமெரிக்க நாடுகளில் பல ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசுத் தலைவர்கள் மர்மமான நோய்த் தாக்கங்கங்களால் (பெரும்பாலும் புற்றுநோய்களால்) மரணமுற்று வரும் நிலையில், பப்லோ நெருடாவின் மரணத்திலும் சிலி மக்கள் சந்தேகம் கொண்டுள்ளார்கள்.

எனவே மேலும் முறையான தெளிவான இரசாயன பகுப்பாய்வுகளை மேற்கொள்வதன் மூலமே, நெருடாவின் மரணம் இயற்கையானதா அல்லது கொலையா என்பதை வெளிச்சத்துக்குக் கொண்டுவர முடியும்.

*

6ம் பக்கத்தொடர்ச்சி...

அந்தக் காலகட்டத்தில் தமிழ் குடிமகன் ஒருவர் தனது அத்தியாவசிய தேவைகளுக்காக தனது சொந்தக் காணிகளில் நிற்கும் பனை, தென்னை, மா, பலா, வேம்பு, இலுப்பை என்பனவற்றில் ஏதாவதொன்றைத் தறிப்பதானால், புலிகளின் அனுமதி பெறவேண்டி இருந்ததுடன், அவர்களுக்கு வரிப்பணமும் (கப்பம்) செலுத்த வேண்டி இருந்தது. ஆனால் அவர்கள் மட்டும் பதுங்குகுழி அமைப்பது போன்ற தமது தேவைகளுக்காக பொதுமக்களின் காணிகளுக்குள் அத்துமீறி நுழைந்து தேவையான மரங்களை வெட்டிச் செல்வார்கள். அதிலும் நாவற்குழியிலிருந்து ஆனையிறவு வரையிலான பொதுமக்களின் பத்தாயிரம் ஏக்கர் தென்னந்தோட்டம் புலிகளின் கையிலிருக்கையில் அவர்களது கொண்டாட்டத்தைச் சொல்லவா வேண்டும்? பதிலுக்கு இராணுவமும் புலிகளின் வழிமுறைகளையே பின்பற்றிக் கொண்டனர். இரு பகுதியினருக்கும் மக்களைப் பற்றி அக்கறை இருந்தால்தானே?

இதுஒருபுறமிருக்க, வன்னியிலும், கிழக்கிலும் இருந்த பல்லாயிரக்கணக்கான அரசாங்கத்துக்குச் சொந்தமான அடர்ந்த காட்டுக்காணிகள், புலிகளுக்கு இன்னொரு வரப்பிரசாதமாக இருந்தன. அவைகள் அவர்களுக்கு நல்ல மறைவிடங்களாக மட்டுமின்றி, பணத்தை வாரி வழங்கிய செல்வச் சுரங்கங்களாகவும் இருந்தன. அந்தக் காடுகள் புலிகளைப் பொறுத்தவரை, வற்றாத பணப்பால் சுரந்த காமதேனுக்கள். அந்த அடர்ந்த காடுகளில் மிகவும் பெறுமதி வாய்ந்த தேக்கு, முதிரை, பாலை, யாவரணை, சமண்டலை, வீரை போன்ற உயர்ரக மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. அவற்றையெல்லாம் புலிகள் ஆட்களை வைத்துத் தறித்தெடுத்து வந்து, நகரப்புறங்களில் இருந்த வசதி படைத்த மக்களுக்கு கொழுத்த விலைக்கு விற்றுப் பணம் சம்பாதித்துக் கொண்டனர். விறகுகளாகவும் கொண்டு வந்து விற்றுப் பிழைத்தனர்.

அதேநேரத்தில் இந்தக் காடுகளில் சொந்தத் தேவைகளுக்காக சுள்ளி பொறுக்கியவர்களும், தொழில் இல்லாததால் வயிற்றுப் பிழைப்புக்காக விறகு வெட்டியவர்களும், புலிகளால் திருட்டுப்பட்டம் சூட்டிக் கைது செய்யப்பட்டு, அவர்களது சித்திரவதை முகாம்களில் அடைத்து வைத்து வதை செய்யப்பட்டனர்.

இப்படியெல்லாம் புலிகள் தமது கொள்ளையடிப்புக்காக தமிழ் பகுதிகளில் உள்ள மரங்களை எல்லாம் வெட்டிச் சாய்த்து (மக்களையும்தான்) விட்டுப் போயிருக்கையில், அவர்களது வாரிசுகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அவர்கள் செய்த அழிவுகளுக்குப் பிராயச்சித்தமாக ஒருசில மரக்கன்றுகளையாவது நடுவது அவசியமல்லவா?

ஆனால் இதிலும்கூட கூட்டமைப்புத் தலைமை வழமைபோலத் தந்திரமாக நடந்து கொண்டது. அரசாங்கம் மாவீரர் தின நிகழ்வுகளில் யாராவது பங்குபற்றினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்ததால் தொடை நடுங்கிப்போன கூட்டமைப்புத் தலைவர்கள் யாரும், குறிப்பாக அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் இந்த மரம் நடும் நாடகத்தில் பங்கேற்கவில்லை. முதலமைச்சர் விக்னேஸ்வரனை முன்னுக்குத் தள்ளிவிட்டுவிட்டு, கூட்டமைப்பு எம்.பிக்கள் மறைந்து நின்று கொண்டனர்.

மரம் நடுகைபற்றி வீரச்செய்தி போட்ட ‘உதயன்’ பத்திரிகை, மாவீரர் தினத்தில் உதயன் அலுவலக வளவிலும் மரம் நடப்படும் என்று அறிவித்தது. ஆனால் அங்கு நடந்த மர நடுகை வைபவத்தில் உதயன் உரிமையாளரும், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவனே அதில் பங்குபற்றாது, தனது புருச இலட்சணமான நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பாதுகாப்பதற்காக நழுவிக் கொண்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் சரி, புலிகளும் சரி, இக்கட்டாக சந்தர்ப்பங்களில் மற்றவர்களை முன்னே தள்ளி அவர்களைப் பலிக்கடாக்கள் ஆக்கிவிட்டுத் தாம் தப்பித்துக் கொள்வதில் பலே கில்லாடிகள் என்பதை, இந்த மாவீரர் மரம் நடுகையின் போது மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் கொண்டனர்.

**- யாழவன்**


படிப்பகம்

www.padippakam.com



# தமிழக மீனவர்களின் அத்துமீறலால் இலங்கை மீனவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 900 கோடி ரூபா இழப்பு!

தமிழக மீனவர்கள் இலங்கைக்குச் சொந்தமான – குறிப்பாக வடபகுதி கடல்களில் – அத்துமீறிப் புகுந்து மீன் பிடித்து வருவதால் நமது மீனவர்களுக்கு வருடமொன்றுக்கு 750 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (900 கோடி ரூபா வரை) நஸ்டம் ஏற்படுவதாக இலங்கையின் மீன் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு அண்மையில் அறிவித்துள்ளது.

தமிழக மீனவர்களின் இந்த அத்துமீறல் குறித்து அண்மையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனரத்ன, "கிழமையில் மூன்று நாட்கள் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழக மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடிக்கின்றன. அவர்கள் ஐ.நா சபையினால் சட்டவிரோதம் என அறிவிக்கப்பட்ட வழிமுறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

இந்த மீன்பிடிப் படகுகளில் பெரும்பாலானவை தமிழ்நாட்டிலுள்ள அரசியல்வாதிகளுக்குச் சொந்தமானவை. தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராமும், அங்குள்ள இதர அரசியல் தலைவர்களும் வடபகுதித் தமிழ் மக்களின் சார்பாக இலங்கை அரசிடம் மனித உரிமைப் பிரச்சினைகளைக் கிளப்புகின்றனர். ஆனால் உண்மையான மனிதாபிமானப் பிரச்சினைகளில் அவர்களது யதார்த்தமான நிலை வேறாக இருக்கின்றது" எனக் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், "மிகப்பெரும் குற்றவாளிகளான இந்தப் படகு உரிமையாளர்கள் கூலிக்குத் தொழில் செய்யும் மீனவர்களுக்குப் படகு வழங்கும் போது, 'இலங்கையின் கடல் எல்லைக்குள் சென்று மீன்பிடிக்க வேண்டும்' என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே அவற்றை வழங்குகின்றனர்" எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மீனவர்களுக்குச் சொந்தமான கடல் வளங்களைத் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் அடாவடித்தனமாகச் சூறையாடி வருவதால், இலங்கை மீனவர்களின் ஜீவனோபாயத்தை மேம்படுத்துவதற்காக இலங்கை கடல்தொழில் அமைச்சு வேறு பல நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. குறிப்பாக புலிகளுடனான போர் 2009இல் முடிவடைந்த பின்னர் மீன்வளத்துறை அமைச்சு மேற்கொண்ட பல நடவடிக்கைகளால், மீன், இறால், நண்டு, கணவாய், கடலட்டை, கடல்பாசி என்பனவற்றின் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளிலும், ஜப்பானிலும் இலங்கைக் கடலுணவுகளுக்கான கிராக்கி அதிகரித்துள்ளது.

அரசாங்கம் வரவுசெலவுத் திட்டத்தில் வழமையைவிடக் கூடுதலாக இம்முறை 2 பில்லியன் ரூபாவை மீனவளத்துறை அமைச்சுக்கு ஒதுக்கியுள்ளதால், அத்துறையில் பல அபிவிருத்திப் பணிகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இன்னொரு 4 பில்லியன் தொகை மீன்பிடித்துறை உள்கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

போருக்குப் பிந்தைய அமைதியான சூழ்நிலையாலும், அரசாங்கம் செய்து கொடுத்துள்ள வசதிகளாலும்,


படிப்பகம்

www.padippakam.com

ஏராளமானோர் இப்பொழுது மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அண்மையில் மேற்கொண்ட கணக்கெடுப்பொன்றின்படி, இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேர் வரையில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. அதன் காரணமாக 2013இல் 5 இலட்சம் மெற்றிக் தொன் கடலுணவுகள் பிடிக்கப்பட்டுள்ளன. 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 51.8 வீத அதிகரிப்பாகும். கடல்பாசித் தொழிலை அபிவிருத்தி செய்ததால், இம்முறை 2000 ஆயிரம் கிலோவரை அதுவும் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

2012இல் இவ்வாறு பிடிக்கப்பட்ட கடலுணவுகளில் 14,172 மெற்றிக் தொன் கடலுணவுகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இத்தொகை 2013இல் 16,402 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

மீன்வள நீரியல்வள அமைச்சு போர் முடிவுற்ற பின்னர் 20 மீன்பிடித் துறைமுகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளது. புதிதாக 11 மீன்பிடித் துறைமுகங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மேலும் 6 புதிய மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பதற்காக தாய்வான் நாட்டு நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 7 மீன்பிடித் துறைமுகங்களை நவீனமயப்படுத்துவதற்காக சீன நிறுவனம் ஒன்றுடனும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் நியாய விலையில் கடல் உணவுகளை விற்பதற்கு கடைகள் திறக்கப்பட்டுள்ளதால், விலை அதிகரிப்பு தடுக்கப்பட்டுள்ளது. கருவாடு உற்பத்தியும் கணிசமான அளவு அதிகரித்துள்ளதால், மாலைதீவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பிரசித்தமான "மாசிக்கருவாடு" இறக்குமதி 44 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மீனவர்களுடைய பிற்காலத்துக்கு உதவும் வகையில் காப்புறுதித் திட்டமும், ஓய்வுகாலக் கொடுப்பனவுத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அத்துடன் பலநாட்கள் கடலில் தங்கியிருந்து மீன்பிடிப்பவர்களின் வசதிக்காக 2014ஆம் ஆண்டிலிருந்து செய்மதி தொழில்நுட்ப வசதிகளும் மீனவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இலங்கையில் 30 வருடப் போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கட்டவர்கள் மீனவர்களே. புலிகள் கடல்வழி மார்க்கமாக வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களையும், இதர பொருட்களையும், போதை வஸ்துகளையும் கடத்தி வந்ததாலும், கடலில் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் நிகழ்ந்ததாலும், அரசாங்கம் கடுமையான கடல்வலயத் தடைச் சட்டத்தை அமுல்படுத்தியிருந்தது. புலிகளின் அழிவுக்குப் பின்னர் மீனவர்களின் வாழ்வில் ஓரளவாவது ஒளி பிறந்துள்ளது. ஆனால் மீண்டும் அந்த இருண்ட யுகத்தை ஏற்படுத்துவதற்காக தமிழகத்தில் தலைகீழாக நின்று வேலை செய்பவர்கள்தான் இப்பொழுது தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவதற்கும் பின்பலமாக இருக்கின்றனர்.

தமிழக - இந்திய மத்திய அரசுகள் தமது மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வாக இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவுவதை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, இலங்கை அரசு தனது மீனவர்களுக்குச் செய்து கொடுத்துள்ள வசதிகள் போன்ற வசதிகளைத் தமிழக மீனவர்களுக்கும் செய்து கொடுத்தது போலத் தமது மீனவர்களுக்கும் வசதிகளைச் செய்து கொடுத்து, இலங்கை மீனவர்களுடைய வாழ்வாதாரங்களில் கைவைக்கும் தமிழக மீனவர்களின் செயலைத் தடுத்து நிறுத்த முன்வர வேண்டும்.

**- போல்**

## இந்துக்களின் தேவைகளும் அவற்றை நிறைவேற்றியவர்களும்!

"இந்துக்களுக்கு வேதம் தேவைப்பட்டது, அவர்கள் சாதி இந்துவல்லாத வேதவியாசரை அழைத்தனர். இந்துக்களுக்கு காவியம் தேவைப்பட்ட பொழுது, அவர்கள் தீண்டத்தகாதவரான வால்மீகியை அழைத்தனர். இந்துக்களுக்கு அரசிலமைப்புச் சட்டம் தேவைப்பட்ட போது, அவர்கள் என்னை அழைத்தனர்."

- இந்தியாவின் அரசிலமைப்பை வரைந்தவரும், தாழ்த்தப்பட்ட மக்களின் ஒப்புயர்வற்ற தலைவருமான அம்பேத்கார் இவ்வாறு கூறியிருக்கிறார்.

## யாழ்ப்பாணத்தில் ஒரு மன்டேலா!

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு அருகாமையில் மன்டேலாவின் பெயரால் ஒரு புத்தக நிலையம் செயல்பட்டு வருகிறது. மன்டேலாவின் போராட்டத்தால் ஆகர்சிக்கப்பட்ட வேலணையைச் சேர்ந்த முற்போக்கு சிந்தனை கொண்ட அரசு என்ற யாழ்.பல்கலைக்கழக பட்டதாரியால் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் புத்தகசாலை உருவாக்கப்பட்டது.

அந்த அரசு என்ற முற்போக்கு இளைஞர் எதிர்பாராத வகையில் இளமையிலேயே மரணித்துவிட்டாலும், அந்தப் புத்தகசாலை மன்டேலாவின் பெயரைத் தாங்கிய வண்ணம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடிய ஒரு விடயமே.

"ஆத்மா என்று ஏதும் கிடையாது. மோட்சம், நற்குணம், தீயகுணம், புண்ணிய பாவங்கள், அவற்றின் பயன்கள் என்பவை எல்லாம் இல்லவே இல்லை. கடந்து போனது மீண்டும் வருவதில்லை. உடல் என்பது மண், நீர், தீ, காற்று என்ற நான்கு பூதங்களால் ஆனது. இந்தப் பூதங்கள்தாம் உணர்வுக்கு அடிப்படையானவை. இவற்றிலிருந்துதான் உணர்வு தோன்றுகிறது. பல பொருள் சேர்வதால் மதுவுக்குப் போதை தரும் ஆற்றல் உண்டாவது போல் ஆன்மாவும் பவுதீக உடலில் உண்டாகிறது. பிரத்யட்சம் – புலனறிவு – ஒன்றே அறிவுக்கு சரியான பிரமாணம். உலக இன்பங்களை வெறுத்துத் துறப்பது முட்டாள்தனம். சொர்க்க சுகம் போன்ற புலன்களால் அறிய முடியாத எதையோ நாடிச் செல்வது அறிவீனம்" **– சமண அறிஞர் ஹரிபத்ரர்**

# வரலாற்றில் தனது தடத்தைப் பலமாகப் பதித்துச் சென்ற மாபெரும் புரட்சியாளர் நெல்சன் மண்டேலா!




**வெ**ள்ளை நிறவெறிக்கு எதிராக சளைக்காது போராடி வெற்றி பெற்றவரும், தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியுமான நெல்சன் மண்டேலா (அவரது இயற்பெயர் Rolihlahla Mandela என்பதாகும். இதன் அர்த்தம் "ஒரு மரத்தின் கிளையை அசைப்பவர்"அல்லது "குழப்பத்தை உருவாக்குபவர்" என்பதாகும். நெல்சன் என்ற பெயர் அவரது ஆங்கிலேய பள்ளி ஆசிரியர் வைத்த ஆங்கிலப் பெயராகும்) தமது 95ஆவது வயதில் 2013 டிசம்பர் 05ஆம் திகதி காலமானார்.

அவரது மரணம் சமீபகால உலக வரலாற்றில் உதாரணம் காட்ட முடியாத மிகப்பெரும் இழப்பாக உலக மக்கள் அனைவராலும் உணரப்பட்டது. அவரது மரணம் அறிவிக்கப்பட்டவுடனேயே தமது தலைவரின் பிரிவுத்துயர் தாங்கமுடியாது தென் ஆபிரிக்க மக்கள் வீதிகளில் கூடி கதறி அழுதனர். அவரது மரணச் சடங்கில் முன்னொருபோதும் இல்லாத வகையில் 100இற்கும் அதிகமான உலகத் தலைவர்கள் நேரில் கலந்து கொண்டனர். அவர்களில் சிலர் மண்டேலாவை முன்பு "பயங்கரவாதி"என குற்றஞ்சாட்டிய நாடுகளின் தலைவர்களாவர்.

நெல்சன் மண்டேலா தென் ஆபிரிக்காவின் தென் கிழக்குப் பகுதியிலுள்ள Mvezo என்ற கிராமத்தில் Thembu என்ற பழங்குடியினத்தில் 1918 யூலை 18ஆம் திகதி பிறந்தார். அவரது கொள்ளுப்பாட்டன் அந்த இனத்தின் அரசராக இருந்தவராகும். ஆனால் மண்டேலாவுக்கு ஒரு வயதாக இருக்கும் போது அவரது பெற்றோர் Qunu என்ற கிராமத்துக்கு இடம் பெயர்ந்து கொண்டனர்.

ஒரு மனிதன் 95 வருடங்கள் வாழ்வதென்பது ஒரு மகத்தான வாழ்வாகும். ஆனால் மண்டேலா 95 வயதுவரை வாழ்ந்திருந்தாலும், அவருடைய உண்மையான சுதந்திர வாழ்வு என்பது ஏறத்தாழ 68 வருடங்கள்தான். ஏனெனில் அவர் வெள்ளை நிறவெறிக்கு எதிராக அகிம்சை வழியிலும், ஆயுத வழியிலும் சமரசம் இன்றிப் போராடிய காரணத்தால், அவரை தென் ஆபிரிக்காவை ஆட்சி செய்த வெள்ளை இனவெறி அரசு 27 வருடங்கள், 6 மாதங்கள், 6 நாட்கள் கொடுஞ்சிறையில் அடைத்து வைத்திருந்தது.

நெல்சன் மண்டேலா தமது இனத்தை ஆண்ட அரச குடும்பம் ஒன்றில் பிறந்திருந்தாலும், அதன் வாரிசுரிமையை அவர் விரும்பவில்லை. அவர் கல்வி கற்பதில் நாட்டம் கொண்டவராக இருந்ததுடன், மல்யுத்தம், சிலம்பம் என்பவற்றைக் கற்றுக் கொள்வதில் ஆர்வமாக இருந்தார். அத்துடன் அவர் தமது இளமைக் காலத்தில் ஆபிரிக்க யுத்தப் பிரபுக்களின் வீரதீரக் கதைகளையும், ஆபிரிக்கர்கள் பிரித்தானியர்களுடன் நடாத்திய பல சமர்கள் பற்றிய வரலாறுகளையும் ஆர்வத்துடன் கற்றார்.

போர்ட் ஹரே (Fort Hare) பல்கலைக்கழகக் கல்லூரி என்ற ஒரு சிறிய கல்லூரி ஒவ்வொரு வருடமும் 50 கறுப்பின மாணவர்களைச் சேர்ப்பது வழமை. மண்டேலா அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அங்கு சேர்ந்து படிக்கத் தொடங்கினார். ஆனால் அங்கு நடைபெற்ற மாணவர் கிளர்ச்சி ஒன்றுக்குத் தலைமை தாங்கியதால் 1939இல் அங்கிருந்து விலக்கப்பட்டார். அங்குதான் பிற்காலத்தில் அவரது நெருங்கிய போராட்டத் தோழராகத் திகழ்ந்த ஒலிவர் தாம்புவைச் (Oliver Tambo) சந்தித்தார்.

மண்டேலாவுக்கு 9 வயதாக இருக்கும் போது அவரது தகப்பனார் இறந்துவிட்டபடியால், ஒரு பாதுகாவலரின் மேற்பார்வையில் அவர் வளர்ந்து வந்தார். கல்லூரியிலிருந்து நீக்கப்பட்ட சூழ்நிலையில் அந்தப் பாதுகாவலர் 22வயது நிரம்பிய அவருக்குத் திருமணம் செய்து வைக்க முயன்றார். ஆனால் அதை விரும்பாத மண்டேலா அதிலிருந்து தப்பி ஜோகனஸ்பேர்க் (Johannesburg) நகரத்தைச் சென்றடைந்தார். அங்கு அவர் ஒரு வழக்கறிஞராக வேண்டுமென விரும்பினார். அவருடைய விருப்பப்படியே பல்கலைக்கழகம் ஒன்றில் இணைந்து படித்து வழக்கறிஞரானதுடன், Lazar Sidelsky என்ற யூத வழக்கறிஞரின் கீழ் பணிபுரிந்தார்.

அந்த நேரத்தில்தான் கடந்த 10 வருடங்களாக கறுப்பின மக்களின் உரிமைகளுக்காகப் போராடி வந்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பக்கம் அவரது பார்வை திரும்புகிறது. அந்த அமைப்பினால் பெரிதும் ஈர்க்கப்பட்ட மண்டேலா முதலில் அதன் இளைஞர்


படிப்பகம்

www.padippakam.com

அணியுடன் தன்னை இணைத்துக்கொண்டு தீவிர அரசியலில் ஈடுபடத் தொடங்கினார்.

இந்தக் கட்டத்தில் தனது நண்பர் ஒருவரின் நெருங்கிய உறவுக்காரப் பெண்ணான Evelyn Mase என்பவரைத் திருமணம் செய்கிறார். அவர்களுக்கு நான்கு குழந்தைகள் (ஒரு பெண்குழந்தை பிறந்த சில நாட்களில் இறந்துவிட்டது) பிறந்த நிலையில் 9 வருடங்களில் அவர்களது மணவாழ்க்கை 1955இல் முறிந்து போகிறது. அதன் பின் 1958இல் சமூக சேவகியான Winnie Madikizela சந்தித்து அவரிடம் காதல் வயப்பட்டு அவரை மணந்து கொள்கிறார். (பின்னர் அவரிடமிருந்தும் பிரிவு ஏற்பட்டு, கடைசிக் காலத்தில் புரட்சியாளரும் முன்னாள் மொசாம்பிக் ஜனாதிபதியுமான சமோரா மைக்சேலின் மனைவி Graca Machel என்பவரைத் தமது 80ஆவது வயதில் திருமணம் செய்தார். இறுதிவரை அவருடனேயே வாழ்ந்தார்)

1948இல் நடைபெற்ற தேர்தலில் வெள்ளையர்களின் நிறவெறிக் கட்சியான தேசியவாதக் கட்சி மயிரிழையில் வெற்றிபெற்று அடுத்த 48 வருடங்களுக்கு ஆட்சி நடாத்த தயாராகிவிட்டது. அந்த அரசாங்கம் கறுப்பின மக்களுக்கு எதிரான கடுமையான சட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கொண்டுவந்து அந்த மக்களைச் சொல்லொணாத் துன்பத்தில் ஆழ்த்தியது. அவர்களுடைய நடவடிக்கைகளை எதிர்த்து மன்டேலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், தென் ஆபிரிக்க கொம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் பல்வேறு பெண் அமைப்புகள் என்பன பெரும் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

1960 மார்ச் 21ஆம் திகதி ஜோகனஸ்பேர்க்கின் Sharpeville என்ற நகரப்பகுதியில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கறுப்பின மக்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 69 பேர் இறந்துபோய் விட்டனர். அதன் பிறகே மன்டேலாவும் அவரது ஆபிரிக்க தேசிய காங்கிரசும் வெள்ளை நிறவெறி ஆட்சிக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராடுவதென முடிவு எடுத்தனர். அதன் பின்னர் பல்வகையான ஆயுதத் தாக்குதல்களை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வெள்ளை இனவெறி அரசு மீது நடாத்தி வந்தது.

ஆயுதப் போராட்டம் தொடங்கிய பின்னர் 1961இல் நெல்சன் மன்டேலா ஆபிரிக்க தேசிய காங்கிரசின் இராணுவ அமைப்பான uMkonto weSizwe (Spear of the Nation) பிரதம தளபதியாக இரகசியமாக நியமிக்கப்பட்டார். அதன்பின்னர் மன்டேலா பல ஆபிரிக்க நாடுகளுக்கு சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டு தமது போராட்டத்துக்கு ஆதரவு திரட்டினார். ஆனால் 1962 ஓகஸ்ட் 05ஆம் திகதி அவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதும் ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வந்தது.

அவருக்கு எதிராக, வெள்ளை அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எதிராகச் சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து விசாரணை நடந்தது. அந்த விசாரணையின் போது வெள்ளை நிறவெறி ஆட்சியின் அக்கிரமங்களை அம்பலப்படுத்தியும், தமது சுதந்திரப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை விளக்கியும் மன்டேலா நீதிமன்றத்தில் பிரசித்திபெற்ற உரையொன்றை ஒரு மணித்தியாலம் நிகழ்த்தினார்.

அந்த உரையில் அவர் மிகவும் தெளிவாக, "நான் வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுகின்றேன். அதேபோல கறுப்பு ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடுவேன்" எனத் தெரிவித்தார். அது அவரது நிறவாதத்துக்கு அப்பாற்பட்ட, சர்வதேசியக் கண்ணோட்டத்தைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியது. அதன் பின்னர் வெள்ளை நிறவெறி அரசு அவருக்கு ஆயுள்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. அதன் பின்னர் அவர் தீவு ஒன்றில் தனிமைச் சிறையில் நீண்ட 27 ஆண்டுகளைக் கழிக்க நேர்ந்தது. இருப்பினும் அவர் ஒருபோதும் எதிரியிடம் அடிபணியவோ, தனது விடுதலை இலட்சியத்தை விட்டுக் கொடுக்கவோ இல்லை. உறுதி குன்றாத புரட்சியாளராகவே வாழ்ந்தார்.

கறுப்பின மக்களின் தொடர்ச்சியான விட்டுக்கொடுக்காத போராட்டம் காரணமாக வெள்ளைநிறவெறி அரசு அடிபணிந்து 1989 ஒக்ரோபர் 15ஆம் திகதி மன்டேலாவை விடுதலை செய்தது. அவர் ஒரு சுதந்திர புருசராக, தன்னிகரில்லாத தலைவராக வெளியே வந்து தனது போராட்டத்தைத் தொடர்ந்தார்.

**கௌதமன்**

1994இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மண்டேலா தென் ஆபிரிக்க மக்களின் அமோக ஆதரவுடன் முதலாவது கறுப்பு இன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் 5 ஆண்டுகள் 1999 வரை அவர் தென் ஆபிரிக்காவின் ஜனாதிபதியாக – முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார்.

அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் வெள்ளை நிறவெறியர்களைப் பழிக்குப் பழி வாங்குவார் என பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அவ்வாறு செய்தால், அது வெள்ளை நிறவெறியர்களுக்கும் தமக்கும் வித்தியாசம் இல்லாமல் செய்துவிடும் என அவர் உணர்ந்ததுடன், அது தென் ஆபிரிக்காவின் ஸ்திரத்தன்மையையும், ஜனநாயக விழுமியங்களையும், நாட்டின் வளர்ச்சியையும் இல்லாமல் செய்துவிடும் என்றும் புத்திசாலித்தனமாகக் கருதியதால், அதைத் தவிர்த்துக் கொண்டார்.

அவரது புத்திசாதுரியமான நடவடிக்கையால், தென் ஆபிரிக்காவில் மீண்டும் ஒரு உள்நாட்டுக் குழப்பம் வராமல் தடுக்கப்பட்டதுடன், உலக மக்களின் நன்மதிப்பையும் அது அவருக்குப் பெற்றுக் கொடுத்தது. அவரது முன்மாதிரி உள்நாட்டுக் குழப்பங்களில் சிக்கித் தவிக்கும் பல உலக நாடுகளுக்கு (இலங்கை உட்பட) இன்று ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.


படிப்பகம்

www.padippakam.com

அதுமாத்திரமின்றி, அவர் தனது ஆயுள்காலம் முழுவதற்குமே ஜனாதிபதியாகப் பதவி வகிக்க விரும்பியிருந்தால், அதற்குத் தென் ஆபிரிக்க மக்கள் ஒப்புதல் அளிக்கத் தயாராக இருந்தபோதும், அவர் அவ்வாறு இருக்க விரும்பவில்லை. ஒருதரத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்துக்கொண்டு, தனது தென் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் இதர தலைவர்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்கிவிட்டு ஒதுங்கிக் கொண்டார். இன்று அவரது வாரிசாக யாக்கூப் ஸூமா (Jacob Zuma) ஜனாதிபதியாகப் பதவி வகிக்கின்றார். அவரது இந்த முன்மாதிரி இன்று பதவியில் விடப்பிடியாக ஆயுள்காலம் முழுவதும் ஒட்டிக் கொண்டிருக்கும் சில நாடுகளின் அரசுத் தலைவர்களால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத ஒன்றாகும்.

தென் ஆபிரிக்கா வெள்ளை நிறவெறி ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்காக நடாத்திய போராட்டத்தில் நெல்சன் மன்டேலாவின் பாத்திரம் ஒப்புவமை இல்லாதது. இருப்பினும் வரலாற்றை விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் இருந்து பார்க்கும் போது, அவரது பாத்திரம் ஒரு வரையறைக்குட்பட்டதாகவே இருந்துள்ளதும் புலனாகின்றது. அவர் தொடக்கி வைத்த தென் ஆபிரிக்காவின் விடுதலைப் போராட்டம் தனது பாதிப் பயணத்தையே பூர்த்தி செய்துள்ளது. அவரது வரலாற்றுப் பணி அத்துடன் நிறைவு பெற்றுவிட்டது. அதற்கு அப்பால் அவர் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

ஏனெனில் ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டம் என்பது, அந்நாட்டை புற அல்லது அக எதிரியிடமிருந்து அரசியல் ரீதியாக விடுதலை செய்வதுடன் முடிந்துவிடுவதில்லை. அதற்கும் அப்பால் மக்களின் சமூக விடுதலையையும் வென்றெடுக்கும் போதுதான் அது முழுமையடைகின்றது. மன்டேலா புரட்சியின் முதல் கட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருந்தாலும், இரண்டாவது பணியான சமூக மாற்றத்தை அவரால் பூர்த்தி செய்ய முடியவில்லை. இதற்கு அவரது சமூகப் பார்வையும், சித்தாந்த அடிப்படையும் காரணங்கள் எனலாம். அவரது பணியை சீனாவில் சன்யாட்சன் 1911ஆம் ஆண்டு மன்னராட்சியை ஒழித்து முதலாளித்துவ குடியரசு ஆட்சியை மலர வைத்ததுடன் ஒப்பிடலாம். சீனப் புரட்சியின் இரண்டாவது கட்டமான சமூக மாற்றத்தைப் பின்னர் சீனக் கம்யூனிஸ்ட்டுகள் நிறைவேற்றி வைத்தனர்.

உதாரணமாக, 1917ஆம் ஆண்டு ரஸ்ய அக்டோபர் புரட்சியின் போது, லெனின் தலைமையிலான போல்ஸ்விக்குகள் ஜார் மன்னனின் எதேச்சாதிகார ஆட்சியைத் தூக்கி எறிந்ததுடன் நின்றுவிடவில்லை. அதைத் தொடர்ந்து ரஸ்ய சமூகத்தில் நிலவிய வர்க்க மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளை ஒழித்துக்கட்டும் புரட்சியைத் தொடர்ந்து நடாத்தி, அங்கு வர்க்க பேதமற்ற சமத்துவ — சோசலிச சமுதாயம் ஒன்றை ஏற்படுத்தினர். அதன் மூலமே சோவியத் மக்களின் பரிபூரண விடுதலை உறுதிப்படுத்தப்பட்டது.

இதேபோன்ற ஒரு நிலையைத்தான் மாஓ, ஹோசிமின், ஃபிடல் கஸ்ட்ரோ போன்றோர் தத்தமது நாட்டின் எதிரிகளை ஒழித்துக்கட்டிய பின்னர் தமது நாடுகளில் செய்தனர். அதனால்தான் அங்கு சோசலிச அமைப்புகள் நிறுவப்பட்டன. அவர்களால் அவ்வாறு வெற்றிகரமாக புரட்சியைத் தொடர முடிந்ததிற்குக் காரணம், அந்த நாடுகளின் போராட்டங்களை சமுதாய மாற்றத்தை அடிப்படை இலக்காகக் கொண்ட கொம்யூனிஸ்ட் கட்சிகள் தலைமைதாங்கி வழி நடாத்தியதால் ஆகும்.

ஆனால் நெல்சன் மன்டேலாவைப் பொறுத்தவரை, அவ்வாறான சமூக மாற்றப் பார்வை எதுவும் அவருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. அவரது ஒரே நோக்கம் தென் ஆபிரிக்காவில் வெள்ளை நிறவெறி ஆட்சியை ஒழித்துக்கட்டுவது என்ற ஒரே குறிக்கோளை மட்டுமே கொண்டதாக இருந்தது. அவர் அதை வெற்றிகரமாகச் செய்து முடித்தார். அத்துடன் தனது பணியை நிறுத்திக் கொண்டார். ஆட்சியில் இருப்பவர்கள் மாறினார்களேயொழிய, சமுதாயம் மாற்றமடையாமல் அதே ஏற்றத்தாழ்வான சமூகமாகவே தொடர்ந்தது.

தென் ஆபிரிக்காவில் வெள்ளை நிறவெறி ஆட்சியை ஒழித்துக்கட்டிய பின்னர், புரட்சியைத் தொடர்ந்து நடாத்தி, அங்கு ஒரு சோசலிச சமூக அமைப்பைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரு கட்சி அங்கு இருந்தது. அதுதான் தென் ஆபிரிக்க கொம்யூனிஸ்ட் கட்சி. அக்கட்சி நெல்சன் மன்டேலாவுக்கு முன்னரே வெள்ளை நிறவெறக்கு எதிராகப் போராடத் தொடங்கிய கட்சி. ஆனால் சோவியத் கொம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாதத் தலைமையின் தவறான வழிகாட்டலால், தென் ஆபிரிக்க சமூகத்தின் பிரதான முரண்பாட்டையும், போராட்ட சக்திகளையும் சரியாக எடைபோடத் தவறி, நெல்சன் மன்டேலா போன்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியாளர்களிடம் தலைமையை அக்கட்சி இழந்தது.

இதேபோன்ற ஒரு தவறைத்தான் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது, இந்தியக் கொம்யூனிஸ்ட்டுகளும் செய்தார்கள். இரண்டாம் உலக யுத்த காலகட்டத்தில் ஹிட்லர் தலைமையிலான உலக பாசிச சக்திகளுக்கு எதிரான ஐக்கிய முன்னணியில் சோசலிச சோவியத் யூனியனும், ஏகாதிபத்திய - முதலாளித்துவ நாடுகளான பிரித்தானியா, அமெரிக்கா போன்றனவும் கூட்டுச் சேர்ந்ததின் விளைவாக, இந்திய கொம்யூனிஸ்ட்டுகளின் பிரித்தானிய காலனித்துவாதிகளுக்கெதிரான போராட்டத்தில் தளர்வு ஏற்பட்டது. அதனால் இந்திய காங்கிரஸ் கட்சிக்குச் சரிக்கு சரி சமனாக சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இந்திய கொம்யூனிஸ்ட்டுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, காந்தியும் காங்கிரஸ் கட்சியும் தேசபிதாக்களாகவும், சுதந்திரப் போராட்ட வீரர்களாகவும் முடி சூடிக் கொண்டனர். அதன் காரணமாக இந்தியாவுக்கு வெள்ளையனிடமிருந்து சுதந்திரம் கிடைத்த போதிலும், மக்களின் வாழ்க்கை நிலை இன்னமும்


படிப்பகம்

www.padippakam.com

மாறவில்லை. இதே நிலைதான் மன்டேலா விட்டுச் சென்ற தென் ஆபிரிக்காவிலும் நிலவுகின்றது.

இன்று மன்டேலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆட்சியின் கீழ் மக்களின் எந்த அடிப்படைப் பிரச்சினைகளும் தீர்க்கப்படவில்லை. அங்கு ஆளும் அதிகாரத்துவம் கோலோச்சுகின்றது. ஊழல், இலஞ்சம், வேலை இல்லாத் திண்டாட்டம், பணவீக்கம் என்பன கட்டுக்கடங்காமல் உள்ளன. இதனால் மூலைக்கு மூலை வன்முறைக் கும்பல்கள் தலையெடுத்துள்ளன. சில மாதங்களுக்கு முன்னர் சம்பளவுயர்வு மற்றும் வேலைத்தள மேம்பாடுகள் கேட்டுப் போராடிய சுரங்கத் தொழிலாளர்களில் சிலரை பொலிஸ் சுட்டுக் கொன்றது. மண்டேலா உயிருடன் இருக்கையில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி அவர் கண்டனம் எதுவும் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

மன்டேலா ஒரு மாபெரும் தேசியப் புரட்சியாளர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் அவர் முதலாளித்துவ ஜனநாயக சிந்தனை கொண்ட ஒருவராக இருந்ததினாலேயே அவரால் அதற்கு அப்பால் செயற்பட முடியவில்லை என்பது விளங்கிக் கொள்ளப்படக் கூடியதே.

2007 மார்ச் 25இல் இந்தியாவின் முன்னணி ஊடகங்களில் ஒன்றான 'தெஹல்கா'விற்கு வழங்கிய ஒரு நேர்காணலில், இந்தியாவின் முன்னணி மனித உரிமைச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான அருந்ததி ராய், மன்டேலா பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

"எல்லோருமே ஆட்சிக்கு வரும்போது அடியோடு மாறிவிடுவார்கள் என்பது உண்மையே. மன்டேலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரசைப் பாருங்கள். அது சீர்கெட்டுப் போயிருக்கிறது. முதலாளித்துவத்தைக் கடைப்பிடிக்கிறது. சர்வதேச நிதியத்துக்கு அடிபணிகிறது. ஏழைகளை அவர்கள் வீட்டைவிட்டுத் துரத்துகிறது. லட்சக்கணக்கான இந்தோனேசியக் கம்யூனிஸ்ட்டுகளைக் கொன்று குவித்த சுஹார்த்தோவுக்கு தென்னாபிரிக்காவின் மிக உயர்ந்த மக்கள் விருதை அளித்துக் கௌரவிக்கின்றது. இதெல்லாம் நடக்கும் என்று யார் எதிர்பாத்திருப்பார்கள்? அதற்காகத் தென்னாபிரிக்கர்கள் நிறவெறிக் கொள்கைக்கு எதிரான போராட்டத்திலிருந்து பின்வாங்கியிருக்க வேண்டும் என்று, அல்லது போராடியதற்காக வருத்தப்பட வேண்டும் என்று சொல்ல முடியுமா?"

உண்மையில் இதுதான் மன்டேலாவின் தென் ஆபிரிக்காவின் இன்றைய நிலை. ஆனால் சமுதாய மாற்றம் என்பது இடையறாது நிகழும் ஒரு விதி என்றபடியால், தென் ஆபிரிக்க மக்களும் தமது விடுதலைப் பயணத்தை மீண்டும் தொடரவே செய்வர். அதாவது நெல்சன் மன்டேலா தொடக்கி வைத்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை, அடுத்த கட்டமான மக்கள் (புதிய) ஜனநாயகப் புரட்சியாக முன்னெடுப்பார்கள் என்பது நிச்சயம். அதற்காக எதிர்காலத்தில் தென் ஆபிரிக்க மக்கள் மத்தியிலிருந்து மேலும் பல புதிய மன்டேலாக்கள் உருவாகுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. *

---

முன்பக்கத்தொடர்ச்சி...

விளங்கியது 'முடிசூடாமன்னன்' ஜீ.ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சி. அந்தக் கட்சி தன்னை தமிழ் மக்களின் ஏகபோகப் பிரதிநிதியாகக் கருதிச் செயல்பட்டு வந்தது. அதனுடைய அடாவடித்தனங்களை மீறி அதன் ஏகபோகத்தைத் தகர்க்க, அதிலிருந்து பிரிந்த செல்வநாயகம், வன்னியசிங்கம் போன்றார்களால் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக்கட்சி கடுமையாகப் பிரயத்தனப்பட வேண்டி வந்தது. ஒரு கட்டத்தில் அவர்கள் தமிழ் காங்கிரசின் தாக்குதலிலிருந்து தம்மைப் பாதுகாக்க கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவையும் பெறவேண்டி வந்தது.

தமிழ் காங்கிரசின் ஏகபோகம் உடைக்கப்பட்ட பின்னர் தமிழரசுக்கட்சி தனது ஏகபோகத்தை ஸ்தாபித்துக் கொண்டது. அவர்கள் மற்றக் கட்சிகளை செயல்பட விடாது இனவாத அரசியல் மூலமும், ஐ.தே.க ஆட்சியில் இணைந்திருந்த நேரம் (1965 – 70) வன்செயல்கள் மூலமும் தடுத்தனர். அவர்களுடன் பரம எதிரியாக இருந்த தமிழ் காங்கிரசும் அதே ஐ.தே.க அரசில் அங்கம் வகித்தது. அதற்குக் காரணம் இரண்டு தமிழ் கட்சிகளும் எதிரும் புதிருமாக செயல்பட்டாலும், இருவரதும் கொள்கைகளும் தமிழ் இனவாதம், பிற்போக்கு, ஐ.தே.க அதரவு, ஏகாதிபத்திய சார்பு என இருந்ததினால், இருவருமே ஐ.தே.க அரசில் ஒன்றாகச் சேர்ந்து கொண்டனர்.

ஆனால் 1970 பொதுத் தேர்தலில் இந்த இர கட்சிகளினதும் பிரசித்தமான தலைவர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலம், அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம், ஈ.எம்.வி.நாகநாதன், மு.ஆலாலசுந்தரம் போன்றோரைத் தோற்கடித்ததின் மூலம் மக்கள் அவர்களுக்குத் தகுந்த பாடம் கற்பித்தனர். நிலைமையின் பாரதுாரத்தை உணர்ந்த தமிழரசு – காங்கிரஸ் தலைமைகள் 25 வருடப் பகைமையை மறந்து, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற புதிய அமைப்பை உருவாக்கியதுடன், தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குப் பெறுவதற்காக 'தமிழீழம்' என்ற கோசத்தையும் முன்வைத்தனர். அதன் மூலம் 1977 பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கில் முழுத் தெகுதிகளிலும் வெற்றியும் பெற்று, பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தையும் பெற்றுக் கொண்டனர்.

அதேவேளை, தாமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற பிரகடத்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணி செய்து கொண்டது. அது அரச எதிர்ப்பு வன்செயல்களில் ஈடுபட்டது மாத்திரமின்றி, தமிழ் பகுதிகளில் முற்போக்கு – ஜனநாயக சக்திகள் செயற்பட முடியாதவாறும் முட்டுக்கட்டை போட்டது. அதையும் மீறிச் செயற்பட்டவர்களை "துரோகிகள்" எனத் துாற்றியதுடன், அவர்களை அழித்தொழிக்கும் வன்முறை செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைத்தது. ஆனால் 'வளர்த்த கடா மார்பில் பாய்ந்த' கதையாக, அவர்களால் உசுப்பிவிடப்பட்ட தமிழ் இளைஞர்கள் ஆளுக்கொரு ஆயுதக் குழுக்களை நிறுவிக்கொண்டு, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களையே வேட்டையாடத் தொடங்கினர். அத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏகப்பிரதிநிதித்துவ அரசியல் முடிவுக்கு வந்தது.

அதன் பின்னரான காலத்தில் தமிழ் இளைஞர்களின் பல்வேறு ஆயுதக் குழுக்கள் செயற்பட்டதோடு, யார் ஏகபோகம் செலுத்துவது என்பதில் மோதல்களும் ஆரம்பமாகி, இறுதியில் அது சகோதரப் படுகொலைகளில் போய் முடிந்தது. இறுதியில் சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளினால் ஊட்டி வளர்க்கப்பட்ட புலிகள் இயக்கம் மற்றைய இயக்கங்களை துப்பாக்கி முனையில் அழித்தொழித்து, தானே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி என முடிசூடிக் கொண்டது. அதன் ஆயுத பலத்தின் முன்னால் அனைத்து தமிழ் அரசியல் சக்திகளும் அடங்கி ஒடுங்கிப் போய்விட்டன. புலிகள் தமிழ் மக்கள் மேல் தாம் விரும்பியவாறு சவாரி செய்தனர்.

ஆனால் புலிகளது பயங்கரவாத செயற்பாடுகள் இலங்கையின் எல்லைகளையும் தாண்டி சர்வதேச மயப்பட்ட பொழுது, அவர்கள் அழிக்கப்பட வேண்டிய தேவை இலங்கை அரசுக்கு மட்டுமின்றி,


படிப்பகம்

www.padippakam.com

சர்வதேச சமூகத்துக்கும் (குறிப்பாக இந்தியாவுக்கு) ஏற்பட்டது. அதன் காரணமாக அந்த வாய்ப்பான சூழலைப் பயன்படுத்தி புலிகள் இயக்கத்தை உள்நாட்டில் இலங்கை அரசு முற்றிலுமாகத் துடைத்தழித்தது.

அதன் பின்னர் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு ஜனநாயக இடைவெளி ஏற்பட்டு, ஆரோக்கியமான அரசியல் சூழல் ஏற்படும் என பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் நிலைமைகள் அதற்கு எதிர்மாறாகவே சென்று முடிந்துள்ளன.

அதாவது அரசாங்கம் தமிழ் பிற்போக்கின் முன்னணி ஆயுதக்குழுவான புலிகளை மாத்திரம்தான் அழித்தொழித்ததேயொழிய, அதன் ஆணிவேரைப் பிடுங்கி எறியவில்லை. அதனால் தமிழ் மேட்டுக்குடி இனவாத, பிற்போக்கு சக்திகள் தமது தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கட்சியில் மீண்டும் தம்மைத் தகவமைத்துக் கொண்டுள்ளதுடன், இன்று அதைப் பலப்படுத்தியும் வருகின்றன. அவர்களுக்கு புலம்பெயர் புலிச் சக்திகள், ஏகாதிபத்திய சக்திகள், தமிழ்நாட்டின் தமிழினவாதிகள் என, ஒரு பலமான சர்வதேசப் பின்னணியும் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அவர்கள் மீண்டும் தம்மைத் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாகக் காட்டிக்கொண்டு, தமிழ் மக்கள் மத்தியில் பலகட்சி ஜனநாயக அரசியல் முறைமை உருவாகாமல் தடுத்தி வருகிறார்கள். அதனால் புலிகளை அழித்ததின் பயனை மக்கள் அனுபவிக்க முடியாமல் உள்ளது. எப்படி தமிழ் பிற்போக்கு சக்திகள் மீண்டும் தம்மை ஏகபோகமாக்கிக் கொண்டார்கள் என்பதற்கான பின்னணிக் காரணிகள் ஆழமாக ஆராயப்பட வேண்டும். அதை ஆராயாமல் தமிழ் மாற்றுச் சக்திகள் வளர்ச்சி பெறுவது சாத்தியமில்லை.

தமிழ் பிற்போக்கு சக்திகள் மீண்டும் பலம் பெற்றதற்கான புறக்காரணிகளாக அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகள் ஒருபுறமும், சர்வதேச ஏகாதிபத்திய மற்றும் பிற்போக்கு சக்திகள் அவர்களுக்கு வழங்கி வரும் ஆதரவு மறுபுறமுமாக இருக்கின்றன.

அதேநேரத்தில் அகக் காரணங்களாக தமிழ் முற்போக்கு – ஜனநாயக சக்திகள் மத்தியில் ஒற்றுமை இன்மையும், அவை ஒன்றுபட்ட ஒரு அமைப்பாக செயற்படாமையும் அமைகின்றது. இதுதான் இன்று தீர்வு காணப்பட வேண்டிய மிக முக்கிய பிரச்சினையாக உள்ளது.

தமிழ் பிற்போக்கு சக்திகளின் ஏகப்பிரதிநிதித்துவத் தலைமை என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அது யாழ்ப்பாண மேட்டுக்குடிக் குழாமினால் சேர்.பொன்.இராமநாதன் காலத்திலிருந்து வழி வழியாக, ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம் இன்றைய சம்பந்தன் வரை தொடர்வது. இடையில் அந்தக் குழாமைச் சாராத பிரபாகரன் தமிழர்களுக்குத் தலைமைதாங்கப் புறப்பட்டார். அதற்கு அவரது சமூகப் பின்னணியின் 'வீரதீரம்' (சட்ட விரோதம்) கைகொடுத்தது. ஆனால் அவரும் பின்னர் தனது திருமணத்தின் மூலம் யாழ்.மேட்டுக்குழாமில் ஒருவராகத் தன்னை தகவமைத்துக் கொண்டார்.

எனவே தமிழ் சமூகத்தின் இந்தப் பாரம்பரியமான போக்கு இன்னும் சில காலத்துக்குத் தொடரவே செய்யும். ஆனால் இன்றைய நவீன உலகச் சூழலில் அது நீண்ட காலத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியாது. தமிழ் மாற்றுச் சக்திகள் ஒரு சரியான வேலைத்திட்டத்தை வகுத்து, அதன் அடிப்படையில் தமக்குள் ஒரு ஒற்றுமையைக் கட்டியெழுப்பினால், அவர்களால் அந்த நிலைமையை நிச்சயமாக மாற்றி அமைக்க முடியும்.

அதற்கு சிங்கள முற்போக்கு சக்திகளின் உதாரணத்தை நாம் அடிப்படையாகக் கொள்ளலாம். 1977இல் ஐ.தே.கவுக்கு எதிரான சக்திகள் படுதோல்வியைத் தழுவிய போதிலும், அவர்கள் ஓய்ந்திருக்கவில்லை. சிங்கள தேசியவாதத்தையும், ஏகாதிபத்திய விரோதத்தையும் ஒருங்கே கொண்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சோசலிசத்தை அடிப்படையாகக் கொண்ட இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையே அவர்களது 1970 – 77 ஆட்சிக் காலப்பகுதியின் போது ஏற்பட்ட முரண்பாடும், பிளவுமே ஐ.தே.க அமோக வெற்றிபெறுவதற்கான வாய்ப்பைத் தோற்றுவித்தது. அந்த முரண்பாடு களையப்பட்ட போது, அதன் பின்னர் ஐ.தே.கவினால் இன்றுவரை எழுந்து நிற்க முடியாமல் போய்விட்டது.

ஏறத்தாழ இதுதான் தமிழ் மாற்றுச் சக்திகளின் இன்றைய நிலையும். எனவே நிலைமையை ஆழமாக ஆராய்ந்து பார்த்து இதற்கு ஒரு முடிவு ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற தமிழ் இனவாத, ஏகாதிபத்திய சார்பு பிற்போக்குக் கட்சி தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கும் வரை தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்சினையும் தீர்ப்போவதில்லை. இது கடந்த 65 வருட வரலாறு.

எனவே அவர்களை திடீரென மக்கள் மத்தியில் இருந்து தூக்கி எறிவது சாத்தியப்படாவிடினும், குறைந்த பட்சம் முதலில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பன்முகத்தன்மையை உருவாக்குவதன் மூலம், பலகட்சி ஜனநாயக அரசியல் சூழலுக்கான அடித்தளத்தை உருவாக்க வேண்டும். அதற்கு முதலில் சிங்கள இனவாத ஆட்சியாளர்களுக்கு எதிராகத் தமிழ் கட்சிகள் எல்லாம் ஓரணியில் நிற்க வேண்டும் என்ற கூட்டமைப்பினரது ஏமாற்றுக் கோசம் முறியடிக்கப்பட வேண்டும்.

இவற்றைச் சரிவரச் செய்வதில்தான் தமிழ் மாற்று அரசியல் சக்திகளின் எதிர்காலம் தங்கியுள்ளது. *

---

16ம் பக்கத்தொடர்ச்சி...

தேசியக் கூட்டமைப்பினர், தொழிலாள வர்க்க விரோதியும், தமிழர் விரோதியுமான ஐக்கிய தேசியக் கட்சியினரை யாழ்ப்பாணம் அழைத்து வந்து அவர்களுடன் கூட்டாக மேதினம் கொண்டாடியதுடன், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஐ.தே.க தலைவர் ரணில் விச்கிரமங்கவுடன் சிங்கப்படம் போட்ட இலங்கையின் தேசியக் கொடியைக் கூட்டாக ஏந்திப் பிடித்தாரே, அப்பொழுது இந்த ஐங்கரநேசன்கள் எங்கு பதுங்கிக் கொண்டார்கள்?

உண்மை என்னவெனில், தமிழ் தலைமைகள் சாதாரண சிங்கள மக்களுக்கு எதிராக இனவாதம் பேசுவார்கள், ஆனால் தமது வர்க்க சகாவான ஐ.தே.கவின் சிங்களத் தலைமையுடன் கூடிக்குலாவுவார்கள். அதேபோல முற்போக்கு சக்திகளைக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவார்கள், ஐ.தே.க ஆட்சி செய்தால், பவ்வியமாகச் சாமரம் வீசுவார்கள்.

கூட்டமைப்பினரைச் சொல்லிக் குற்றமில்லை. முன்னைய காலங்களில் கோவில் திருவிழாவுக்கு காசு சேர்த்துக் கொடுத்துவிட்டு, வெளியில் நின்று திருவிழா பார்த்த தாழ்த்தப்பட்ட மக்களின் கதையாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை அரியாசனம் ஏற்றி, "நீங்கள் வேண்டிதெல்லாம் செய்யுங்கோ, நாங்கள் ஏறெடுத்தும் பார்க்க மாட்டோம்" என்று இருக்கிறார்களே நமது தமிழ் பொதுஜனம், அவர்கள்தான் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும். *


படிப்பகம்

www.padippakam.com

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

## கடைசிப் பக்க குறிப்புகள்:

# இந்தக் கேள்விக்கென்ன பதில்?

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாணசபை நிர்வாகம் மக்கள் தம்மை ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பதை மறந்து அல்லது தமது கையாலாகத்தனத்தை மறைப்பதற்காக தேவையற்ற விதண்டாவாதங்களில் ஈடுபட்டு வருகின்றது. அதில் ஒன்று வட மாகாண அளுநர் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியை மாற்ற வேண்டும் என்பது.

பொதுவாகப் பார்க்கும் ஒருவருக்கு அவர்களது இந்தக் கோரிக்கையில் நியாயம் இருப்பது போலத் தோன்றும். உண்மையில் சாதாரண காலங்களில், சாதாரணமான ஒருவர் அந்தக் கோரிக்கையை விடுத்தால், அதில் நியாயமும் உண்டு. ஆனால் எந்தவொரு கோரிக்கையிலும் அல்லது செயற்பாட்டிலும் அதை விடுப்பவரின் நோக்கம் என்ன? அதை ஏன் விடுக்கிறார்? அதனால் என்னத்தை அடைய விரும்புகிறார்? என்ற கேள்விகளுக்கு மறைவான காரணிகள் புதைந்து கிடக்கும்.

அது ஒருபுறமிருக்க, அந்தக் கோரிக்கையை விடுப்பவருக்கு அதை விடுவதற்கான தார்மீக அருகதை உண்டா என்ற வேள்வியும் முக்கியமானது. அப்படிப் பார்த்தால் வட மாகாண ஆளுநர் சந்திரசிறியை மாற்றச் சொல்லிக் கேட்பதற்கு, வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கோ அல்லது அந்தச் சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கோ எந்தவிதமான அருகதையும் இல்லையென்றே கூற வேண்டும்.

ஏனெனில், இலங்கை இராணுவத்தின் பிரதம தளபதியாக இருந்து, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக விருப்ப ஓய்வு பெற்ற சரத் பொன்சேகாவை கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எவ்வித தயக்கமோ, கூச்சநாச்சமோ இன்றி ஆதரித்த ஒரேயொரு தமிழ் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பாகும். அதுவும் அவர் ஒரு சாதாரண இராணுவத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்றவர் என்றால்கூட பரவாயில்லை.

அவர் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் மரணத்துக்குக் காரணம் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர். இறுதிக்கட்டப் போரின் போது பல்லாயிரக்கணக்கான தமிழர்களை இராணுவம் கொன்று குவித்ததாக இன்று புலிசார்பு அமைப்புகளும், மேற்கு நாடுகளும் பிரச்சாரம் செய்வதற்கு பிரதான காரணியாக இருந்தவர் அவர். (இந்தக் குற்றச்சாட்டுகளில் உள்ள உண்மை பொய் வேறு விடயம்) அத்துடன் இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக ஏற்காமல், 'வேண்டுமானால் தமிழர்கள் இலங்கையில் இருந்துவிட்டுப் போகட்டும் ஆனால் உரிமை கிரிமை என்று எதுவும் பேசக்கூடாது' என கனடிய ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்தவர்!

அதுமாத்திரமின்றி, தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்கப்பட்ட புலிகள் அவரை ஒருமுறை பெண் தற்கொலைக் குண்டுதாரி மூலம் கொலை செய்ய முயன்று மயிரிழையில் உயிர் தப்பியவரும்கூட பொன்சேகா. அப்படியானவரை முழுநாட்டினதும் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியாக்கத் துடித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு, (தப்பித்தவறி பொன்சேகா ஜனாதிபதியாக வந்திருந்தால், தமிழர்களின் கதி மட்டுமல்ல, முழுநாட்டினதும் கதி என்னவாகியிருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை) ஒரு இரண்டாம் மட்ட அல்லது மூன்றாம் மட்ட இராணுவ அதிகாரியாக இருந்த ஒருவர் ஒரு மாகாணத்தின் ஆளுநராக இருக்கக்கூடாது குரல் எழுப்புவது, முற்றுமுழுதான கயமைத்தனமும் அந்தரங்க நோக்கம் கொண்டதுமாகும்.

சந்திரசிறியை மாற்றுவது மட்டுமல்ல, முழு இராணுவமுமே வடக்கை விட்டு வெளியேற வேண்டும் என தமிழ் கூட்டமைப்பு விடுத்து வரும் கோரிக்கையின் பின்னணியில் இதை வைத்துப் பார்க்கும் போது, அவர்களது நோக்கத்தின் அபாயகரத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

இதுஒருபுறமிருக்க, மன்னாரில் நடந்த ஒரு வைபவத்தில் பங்குபற்றிய வட மாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், அங்கு இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றமாட்டேன் என மறுப்புத் தெரிவித்திருக்கிறார்.

முன்பு இலங்கையின் சிங்கள சிறீ இலக்கத் தகடுகள் பொறித்த கார்களைப் பார்த்து, "நண்டுக்கால் சிறீ நமக்கு வேண்டாம்" என்று சொன்ன தமிழரசுக் கட்சியினர், பின்னர் அந்தக் கார்களின் சொந்தக்காரர்களானதும், இலங்கை அரசியலமைப்பை ஏற்க மாட்டோம் என்றவர்கள், அதை ஏற்று பாராளுமன்ற சுகபோகங்களை அனுபவிப்பதும், தமிழ் கூறும் நல்லுலகம் கண்ட சுவையான காட்சிகள். ஐங்கரநேசன் இப்பொழுதுதானே வண்டியில் பூட்டப்பட்டிருக்கிறார். ஆரம்பத்தில் இடறத்தான் செய்வார். போகப்போக நன்றாகப் பொதி இழுக்கப் பழகிக் கொள்வார் என்பது நமக்கு மட்டுமல்ல, கூட்டமைப்புத் தலைமைக்கும் நன்கு தெியும்.

தேசியக் கொடிகளைப் பல நாடுகள் பல தடவைகள் மாற்றி அமைத்திருக்கின்றன. அதில் ஒன்றும் புதுமை இல்லை. ஆனால் தமிழ் தலைமைகள் இலங்கையின் தேசியக்கொடியை மாற்றச் சொல்வதற்குக் கூறும் காரணம்தான் விசித்திரமானது. அதில் சிங்கப் படம் இருக்கிறது. அது சிங்களவர்களின் சின்னம். எனவே மாற்ற வேண்டும். இதுதான் அவர்களது விசித்திர வாதம்.

மறுபக்கத்தில் புலி தமிழர்களின் சின்னமென்பதால், அதை ஏற்கலாம் என்பதும் அவர்களது வாதம். ஏற்றும் இருந்திருக்கிறார்கள். அரசியல் கோமாளித்தனங்களுக்குப் பெயர்பெற்ற எம்.கே.சிவாஜிலிங்கமோ, யாரோ, இலங்கையின் தேசியக் கொடியில் புலியின் படத்தைப் பொறிக்க வேண்டும் என அண்மையில் கூறியதாகவும் ஞாபகம்.

ஆனால் இலங்கை மக்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு சிங்கமும் புலியும் இரு கொடிய காட்டு விலங்குகள் என்பதற்கு அப்பால் எதுவும் தெரியாது. வேண்டுமானால் தேசியக்கொடியில் சமாதானத்தின் அடையாளமாக ஒரு வெண் புறாவையோ அல்லது ஒரு பூவையோ, மரம் செடிகளையோ வைத்தால் மகிழ்ச்சியுடன் ஏற்பர். அரசியலில் கொடுஞ்செயல்களைச் செய்பவர்களுக்குத்தான், தேசியக்கொடியில் கொடிய மிருகங்களின் படங்கள் தேவையாக இருக்கின்றன. இது ஒரு உளவியல் உண்மையும்கூட.

இந்த தேசியக்கொடி விவகாரத்திலும் ஒரு சுவாரசியம் பொதிந்திருக்கிறது. 2012ஆம் ஆண்டு மேதினத்தின் போது தமிழ்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...


படிப்பகம்